# ஆத்மா
# 2017



இந்து மன்றம்

புனித சில்வெஸ்டர் கல்லூரி கண்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**8 நாள் தென் இந்திய கோயில் மற்றும் ஷாப்பிங் சுற்றுப்பயணம்**



குழு 01 - 05 ஐப்பசி 2017
குழு 02 - 03 கார்த்திகை 2017
குழு 03 - 01 மார்கழி 2017

இலங்கை ரூபா 73000 /- நபர்


உள்ளடங்கல்கள்
3 நட்சத்திர விடுதி - காலை உணவுடன்
தனிப்பட்ட வாகன வசதி
2 நாள் சென்னை ஷாப்பிங்
இந்திய நாட்டு நுழைவு அனுமதி
பயண சீட்டு : கொழும்பு – மதுரை / சென்னை - கொழும்பு



அழைப்பு : 0777776535

MEERA
TRAVEL & TOURS (PVT) LTD
No 7 D.S.Senanayaka St,Kandy.
94812227777 / 812203050

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Message from the Principal

I am indeed happy to send a message to the souvenir published on the eve of "Sarawathy Pooja" organized by the Hindu Society of this college.

It is believed that this religious festival is intended to receive the blessings from the goddess " Durga, Lashmi, and Saraswathy symbolizing power, prosperity and wisdom. However, not only the Hindus receive the blessings but others are also blessed and benefitted by it.

The religious harmony is an essential factor for the growth of any nation or country. St. Sylvester's College is a multi ethnic and multi religious institution where the students have united to march toward the same goal.

I take this opportunity to express my sincere gratitude to the teachers, office bearers and students of the Hindu Society who have toiled a lot to make this event a memorable one.

May all of you receive the blessings during this festive period.

Principal
T. R.S. Meetiyagoda

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிரதம அதிதியின் ஆசியுரை

மத்திய மாகாணத்தின் கண்டி மாநகரின் மையத்தில் அமைந்துள்ள புனித சில்வெஸ்டர் கல்லூரியின் வாணிவிழா மலருக்கு ஆசியுரை வழங்குவதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன். மாணவர்களுக்கு கல்வியும், அறிவும் போதனை செய்வதோடு நின்றுவிடாது அவர்களது பல்வேறு திறன்களையும், ஆற்றல்களையும் மெருகேற்றி, அரங்கேற்றி, அழகுபார்க்கும் நற்செயலை பாராட்டுகின்றேன்.

மேலும் வாணிவிழாவை சாதாரண ஒரு சமய நிகழ்வாக மட்டுமன்றி விழாவின் பதிவாக ஒரு மலர் வெளியிடுவதும் பாராட்டத்தக்கது. அதேபோல் ஆசிரியர்களதும், மாணவர்களதும் பல்வேறு ஆக்கங்களுடன் வெளிவரும் ''ஆத்மா'' தொடர்ந்து மலரவும் வாழ்த்துகின்றேன். இவ்வாறான முயற்சிகள் இப்பாடசாலையின் வரலாற்றுப் பதிவாக நிலைபெறும் என்பது அசைக்க முடியாத நம்பிக்கையாகும்.

'முயற்சி திருவினையாக்கும்'

'மாணவர் தம் உயர்ச்சி, உயர் சமூகத்தின் வளர்ச்சி'

ஆர்.லோகேஸ்வரன்

உபபீடாதிபதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளரின் ஆசிச்செய்தி

கண்டி புனித சில்வெஸ்ரர் கல்லூரி இந்து மாணவர் மன்றம் வெளியிடும் ஆத்மா என்ற சஞ்சிகைக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

சில்வெஸ்ரர்ஸ் கல்லூரி இந்து மாணவ மன்றம் வருடந்தோரும் நவராத்திரி விழாக்களை வெகு சிறப்பாக நடாத்தி வருவது பெருமைக்குரியதாகும். நவராத்திரி விழா மட்டுமன்றி இந்து சமயம் சார்ந்த சகல விடயங்களிலும் இந்து மாணவர் மன்றம் கூடிய ஆர்வம் செலுத்துவது பாராட்டுக்குரியது.

கல்வித்துறையின் முன்னோடியாக விளங்கும் இக் கல்லூரி நற்பண்பும் அர்ப்பணிப்பும் மிக்க பிரஜைகளை உருவாக்கி வருவது குறிப்பிடத்தக்கது.

இக்கல்லூரி கல்வித்துறையில் பல சாதனைகளை படைத்தது போல இணைப்பாடவிதானத் துறையிலும் பல்வேறு சாதனைகளை படைத்துள்ளமை பாராட்டுக்குரியது.

சிறந்த அதிபரின் வழிகாட்டலின் கீழ் அர்ப்பணிப்பு மிக்க ஆசிரியர் குழாமின் சேவையால் இக்கல்லூரி சமூகத்தில் தனக்கென ஓரிடத்தை தக்கவைத்துள்ளது. இந்நிலை தொடர்ந்து இக்கல்லூரி மென்மேலும் பல சாதனைகளை நிகழ்த்த வேண்டும்.

அதிபர் ஆசிரியர் மாணவர்களின் பங்களிப்போடு வெளிவரும் "ஆத்மா" சஞ்சிகை வெளியீட்டுக் குழுவினர்க்கு எனது மனமார்ந்த பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

அத்தோடு நவராத்திரி விழாவை சிறப்பாக நடாத்திவரும் அதிபர், தமிழ்ப்பிரிவு பிரதி அதிபர், ஆசிரியர்கள், இந்து மாணவர் மன்றம் எல்லோருக்கும் எமது பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இக்கல்லூரி மென்மேலும் தனித்துவம் பெற எல்லாம் வல்ல ஸ்ரீ சித்தி விநாயகர் அருள் புரிவாராக.!

P. S. சதீஸ்
மேலதிக மாகாண கல்வி பணிப்பாளர்
மாகாண கல்வித் திணைக்களம்
மத்திய மாகாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிரதி அதிபரின் ஆசிச்செய்தி

ஆய கலைக ளறுபத்து நான்கினையு
மேயயுணர்விக்கு மென்னம்மை யை சிரம் தாழ்த்தி

இந்து மத அனுஷடானங்கள் பல உள்ளன. இற்றை உரிய முறையில் கைக் கொள்வதன் மூலம் அதன் பயனைப் பெற்றுக் கொள்ளலாம். ஒவ்வொரு தெய்வங்களும் ஒவ்வொரு சக்தியின் வடிவங்களே மூல சக்தியாகிய சிவனும் பராசக்தியும் தமது அருளை ஏனைய தெய்வ உருவில் எமக்கு அருள் பாலிக்கின்றனர். அந்த வகையில் பராசக்தியானவள் மலை மகள்,அலை மகள், கலை மகளாக முறையே துர்க்கை, இலட்சுமி, சரஸ்வதி வடிவில் எமக்கு அருள் பாலிக்கின்றனர். அவர்களை நினைவு கூரும் வகையில் இந்துக்கள் நவராத்திரி விரதம் இருந்து அவர்களின் அருளைப் பெறுவர். நவராத்திரி என்பது ஒன்பது ராத்திரிகள் முதல் மூன்று நாட்கள் வீரத்திற்காக துர்கையையும் அடுத்த மூன்று நாட்கள் செல்வத்திற்காக இலக்குமியையும் இறுதி மூன்று நாட்கள் கல்விக்காக சரஸ்வதியையும் வழிபடுவர். பத்தாம் நாள் விஜய தசமி அன்று ஆயுத பூசையை மேற்கொள்வர்.

எமது பாடசாலையில் நவராத்திரி பூஜையும் வாணிவிழாவும் வருடம்தோறும் சிறப்பாக நடாத்தப்பட்டு வருகின்றது. அந்த வகையில் எமது கல்லூரியின் வாணி விழா சிறப்பாக நடைபெற வாழ்துவதோடு இந்து மாணவர் மன்றம் வெளியிடும் "ஆத்மா" என்ற சஞ்சிகைக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன். அத்துடன் இந்நிகழ்வுக்கு பொருளுதவி சாரீர உதவி, ஒத்துழைப்பு வழங்கிய பெற்றோர்களுக்கும் பழைய மாணவர்களுக்கும் நலன் விரும்பிகளுக்கும் பாடசாலை நிர்வாகத்தினருக்கும் எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்துக்கள் இவ்வாறான நிகழ்வுகளை சமய பாரம்பரியங்களோடு நிகழ்துவதன் மூலம் எதிர்கால சந்ததியினர் எமது சமய விழுமியங்களையும் அனுஷ்டானங்களையும் அறிந்து கொள்வதுடன் அதை தொடர்ந்து எதிர்காலத்திற்கு கொண்டு செல்வர் என்பதில் ஐயமில்லை.

'வாழ்க இந்துமன்றம் வளர்க உங்கள் பணி'

அ. ராஜா ரஞ்ஜிற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பொறுப்பாசிரியையின் உள்ளத்திலிருந்து

"யாதுமாகிநின்றாய் காளி-எங்கும் நீநிறைந்தாய்
தீதுநன்மைஎல்லாம் - நின்றன் செயல்களன்றியில்லை
போதும் இங்குமாந்தர் - வாழும் பொய்மைவாழ்க்கைஎல்லாம்
ஆதிசக்திதாயே என்மீது அருள்புரிந்து காப்பாய்"

எமக்கு சகலவல்லமையும் தரும் ஆதிசக்தியின் மகிமையை நாம் தொன்று தொட்டு போற்றியும் வருகின்றோம். சக்தி வழிபாடு சிந்துவெளி நாகரிக காலத்திலேயே இருந்தமைக்கான பலசான்றுகள் உள்ளன. அது இன்றும் தொடர்கின்றது.

பாடசாலைகள் வெறும் கல்விபுகட்டும் இடங்கள் மட்டுமல்ல. மாணவர்களின் ஒழுக்கம்,விழுமியம்,கலாசாரம் என்பன வளரவும் வழிகாட்டுவன. அதற்காகவே எமதுபாடசாலைக் கலைத்திட்டத்தில் சமயக் கல்வி முக்கியத்துவம் பெறுகின்றது.

சமயம் வாழ்க்கையுடன் இணைந்து மனிதன் வாழ்வாங்கு வாழ வழிகாட்டுவது. எம்மை சமயத்தின் வழியில் இட்டுச் செல்ல உதவுவனவே விரதங்கள். அவ்வகையில் சக்திவிரதங்களுள் முதன்மையானது நவராத்திரிவிரதம். இதன்மூலம் மாணவர்களுக்கு எமது சமய வழிபாட்டுமுறைகளையும் பாரம்பரியங்களையும் நேரடியாக உணரவும், அவர்களின் இலைமறைகாயாக உள்ள திறமைகளை வெளிக்கொணரவும் வாய்ப்பு கிடைக்கின்றது.

அவ்வகையில் எமதுபாடசாலையிலும் வருடாவருடம் வாணிவிழா கொண்டாடப்படுகின்றது. இதனை முன்னிட்டுவெளிவரும் 'ஆத்மா' சஞ்சிகை இவ்வருடமும் சிறப்பாக வெளிவருவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைவதுடன் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் பல்லினமாணவர்கள் கல்விபயிலும் எமது கல்லூரியில் வாணி விழாவை சிறப்பாக வருடாவருடம் நடாத்த சகல உதவி ஒத்தாசை புரிந்த அதிபர், ஆசிரியர்களுக்கும், ஆக்கங்கள் தந்துதவியோருக்கும், வாணிவிழா சிறப்பாக நடாத்த உதவிய பெற்றோர்கள், பழைய மாணவர்களுக்கும், நிர்வாக குழுவினர்க்கும் எனது நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திருமதி. உமாமகேஸ்வரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இணை பொறுப்பாசிரியரின் ஆசிச் செய்தி

நம்பினார் கெடுவதில்லை
நான்கு மறைத் தீர்ப்பு
அம்பிகையை சரணடைந்தால்
அதிக வரம் பெறலாம்

என்ற வாக்கியத்திற்கிணங்க உலக நாயகியான சக்திக்கு விழா எடுக்கும் இந்நாளிலே நவராத்திரியின் மகிமையை அறியாதோர் இல்லை என்று தான் கூற வேண்டும்.

தாய்மைக்கே தனியுரிமை கொடுத்துப் பேணும் சமயம் சைவ சமயம் அதனால் தான் "தாயினிற் சிறந்த கோயிலும் இல்லை", "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என பலவாறாக தாயை சக்தியாக பூஜித்து புரட்டாதி மாதம் வளர்பிறை பிரதமை முதல் நவமி வரை ஒன்பதாம் நாளும் விரதமிருப்பர்.

முதல் மூன்று நாளும் வீரத்தை வேண்டி துர்க்கா தேவியையும் அடுத்த மூன்று நாள் செல்வத்தை வேண்டி இலட்சுமியையும் இறுதி மூன்று நாளும் அழியாச் செல்வமான கல்வியை வேண்டி சரஸ்வதியையும் வணங்கி, அண்ட சராசரங்கள் அனைத்தினையும் ஆண்டு கொண்டிருக்கும் ஆதிபராசக்தியின் அருள் வேண்டி, எமது கல்லூரியிலும் நவராத்திரி விழா கொண்டாடப்படுவ தினையிட்டு பெருமையடைகின்றேன்.

இவ்விழா சிறப்பாக நடந்தேறவும் அனைவருக்கும் சக்தியின் திருவருள் கிடைக்க வேண்டும் என பிராத்தித்து கொள்கின்றேன்.

எல்லாம் சிவமயம்
சர்வமும் சக்திமயம்

திருமதி.ச.செந்தினி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இதழ் ஆசிரியையின் இதயத்திலிருந்து

முப்பெருந்தேவிகளான துர்க்கை, இலக்குமி, சரஸ்வதி தெய்வங்களை அனுஷ்டிக்கும் நவராத்திரி காலத்தில்எமது பாடசாலை இந்து மாணவ மன்றத்தால் வாணி விழா சிறப்புற வருடாவருடம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

அந்த வகையில் இம்முறை சிறப்பாக வாணி விழா ஒன்பது நாட்களும் கொண்டாடப்படுவதுடன் பெருவிழாவாக எமது பாடசாலை பிரதான மண்டபத்தில் கொண்டாடப்படும் வேளை இந்து மாணவ மன்றத்தால்“ஆத்மா” எனும் இதழ் வெளிடப்படுவதையிட்டு பெருமிதம் அடைகின்றேன்.

இவ்விதழ் சிறப்பாக வெளிவர உதவிய பெற்றோர்கள் ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் எல்லோருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவ்விதழ் வெளிவருவதன் மூலம் மாணவர்களின் திட்டமிடல், ஒழுங்கமைப்பு, ஆக்கத்திறன் வளர்வதோடு நற்பண்புகள் வளரும் என்பது திண்ணம். சகலகலாவல்லியான சரஸ்வதியின் அருள் எல்லோருக்கும்கிடைக்க வாழ்த்துகின்றேன்

திருமதி. க. கங்காதரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இணை இதழாசிரியரின் உள்ளத்திலிருந்து

“அன்பே சிவம்” என்பதே சைவ சமய தாரக மந்திரம். அன்புநெறியம் சிவநெறி சிந்துவெளி நாகரீகக்காலம் முதல் இன்றுவரை அதன் பெருமை குன்றாமல் வளர்ந்து வருகின்றது. ஆரம்பத்தில் சைவக்குரவர்களால் வளர்க்கப்பட்ட எமது சமயம் பின்னர் பல்வேறு பெரியார்களால் வளர்க்கப்பட்டது. அக்காலத்தில் எமது கலை, இலக்கியங்கள், பண்பாடு என்பன வளர்க்கப்பட்டது இன்று கோயில்களோ கல்விக்கூடங்களாக விளங்குகின்றன. இன்று பாடசாலைகள் கல்வியையும், கலைகளையும் போதிக்கின்றன. கல்விக்கூடங்களில் சமயம் பிரதானமாக போதிக்கப்படுகின்றது. மக்களை வாழ்வாங்கு வாழச் செய்வது சமயமே. எனவே சமய விழாக்களும் பாடசாலைகள் முன்னுரிமை அளிக்கின்றன.

அவ் வகையில் எமது பாடசாலையிலும் வருடாவருடம் வாணி விழா சிறப்பாக எடுக்கப்படுகின்றது.

அதுனுடன் இணைந்ததாக “ஆத்மா” மலர் வெளியீடும் இடம் பெறவுள்ளது. இதழாசிரியர் என்ற வகையில் இவற்றிற்கு எனது மனமார்ந்த பாராட்டுகளை தெரிவிப்பதுடன் தொடர்ந்தும் எமது மாணவர்களின் இந் முயற்சிகளில் தொடர வாழ்த்துகிறேன்.

V. முரளிதரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மன்றத் தலைவரின் வாழ்த்துச்செய்தி

இயற்கை எழில் கொஞ்சம் மத்திய மலைநாட்டில் புகழுடன் விளங்கும் பாடசாலையாம் கண்டி புனித சில்வெஸ்டர் கல்லூரி மாணவர்கள் ஒவ்வொரு வருடமும் சக்திக்கு விழா எடுத்து அலங்கரிப்பது யாவரும் அறிந்ததே.

மாணவர்கள் மத்தியில் திறன்களை வளர்த்துக் கொள்ள புரட்டாதி மாதம் சக்திக்குரிய 10 நாட்களும் பூசை வழிபாடு செய்து இறுதி நாளான இன்று வாணி விழா கொண்டாடுவதில் பெருமை அடைகிறோம். ஆக்கத்திறன்கள் நிரம்பிய "ஆத்மா" என்ற சஞ்சிகை அனைவரது ஒத்துழைப்புடன் வெளிவருவதை இட்டு பெரு மகிழ்ச்சி அடைவதுடன் அதை வெளியிட உதவிய அனைவருக்கும் எனது நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

இத்திருநாளில் அனைவருக்கும் அன்னையின் அருட்கடாட்சம் கிடைக்கட்டும் என சக்தியை பிரார்திக்கின்றேன்.

அன்பே சிவம்

V.நிலுக்ஷன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மன்றச் செயலாளரின் வாழ்த்துச்செய்தி

"சக்தியின்றேல் சிவம் இல்லை"

அன்பே உருவான எம்பெருமான் சக்தியின் திருவருளினாலேயே அனைத்து திருவருளினையும் எமக்கு புரிகின்றார். அந்த சக்திக்கு ஒன்பது ராத்திரி அது நவராத்திரி .

எமது கல்லூரியாம் புனித சில்வெஸ்டர் கல்லூரியானது இவ்வருடமும் சக்திக்கு விழா எடுத்து அலங்கரிப்பதனை முன்னிட்டு இவ்வருடமும் "ஆத்மா" சஞ்சிகை வெளிவருவதையிட்டும் மகிழ்ச்சியடைவதுடன் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

எமது வாணி விழா சிறப்பாக நடைபெற உதவிய எமது பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர், மாணவர்களுக்கும், சஞ்சிகை சிறப்பாக வெளிவர உதவிய அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்

M.சுஜித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மன்றப் பொருளாளரின் வாழ்த்துச்செய்தி

"மேன்மைக்கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்;"

சைவமக்களாகிய நாம் பல்வேறு விரதங்களை அனுட்டித்தாலும் நவராத்திரி விரதமே மிகச் சிறப்பானதாகும். நவராத்திரி விரதம் எல்லா கல்வி நிறுவனங்களிலும் கொண்டாடப்படுவதுடன் அனைத்து இந்து மக்களாலும் கொண்டாடப்படுகின்றது. அவ்வகையில் உலக மாதாவாகிய சக்திக்கு ஒன்பது நாள் விரதம் இருந்து பத்தாம் நாள் விழா எடுப்பதில் எமது பாடசாலையும் ஒன்று. எமது பாடசாலையில் வருடா வருடம் நடைபெறும் வாணி விழா இவ்வருடமும் மிகச் சிறப்பாக நடைபெற உள்ளதையிட்டு மிக்க மகிழ்ச்சியடைகிறேன். மேலும் இதனை முன்னிட்டு வெளிவருகின்ற சஞ்சிகையான "ஆத்மா" இம் முறையிலும் பல்வேறு ஆக்கங்களை தாங்கி மிகச் சிறப்பாக வெளிவருவது பெருமைக்குரிய விடயமாகும்.

வாணி விழா சிறப்பாக நடைபெறவும் ஆத்மா சஞ்சிகை சிறப்பாக வெளிவரவும் உதவிய எமது அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர், மாணவர்கள் சஞ்சிகைக்கு ஆக்கங்களை தந்துதவியோர் அனைவருக்கும் எமது நன்றிகளை தெரிவித்துக் கொள்வதுடன் "ஆத்மா" சஞ்சிகைக்கு எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

K.ஹரிபிரசாத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மன்ற இதழாசிரியரின் வாழ்த்துச்செய்தி

"அன்பர் பணி செய்ய எனை ஆளாக்கிவிட்டுவிட்டார்
இன்ப நிலை தானாக வந்தெய்தும்பராபரமே"

மக்கள் சேவையே மகேசன் சேவை என்பதுதான் சைவமரபு. சைவமரபுகளை வளர்க்கும் முகமாகவே பாடசாலை கலைத்திட்டங்களில் சமயம் ஒரு பாடமாக உள்ளது. சமயத்தை வெறும் பாடமாக மட்டும் பயிலாது நடைமுறையில் அதன் பராம்பரியங்களை மாணவர்களுக்கு உணர்த்த உதவுவனவே சமய விழாக்கள். அவ் வகையில் எமது பாடசாலையும் வருடாவருடம் சக்திக்கு விழா எடுக்கின்றது. இவ் வருடமும் சக்திக்கு விழா எடுக்கின்றது. எமது பாடசாலை வாணி விழா சிறப்பாக நடைபெற உதவிய அனைவருக்கும் நன்றி கூறுவதுடன் வாணி விழாவை முன்னிட்டு வெளிவருகின்ற "ஆத்மா" சஞ்சிகை சிறப்பாக வெளிவருவதையிட்டு வாழ்துக்களை தெரிவிப்பதுடன் இவ்விழா சிறப்பாக நடைபெறவும் சஞ்சிகை சிறப்பாக வெளிவரவும் உதவிய அனைவருக்கும் நன்றியை தெரிவிக்கிறேன்.

S.கோகுல்நாத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்ச்சி நிரல்

1. அதிதிகளை வரவேற்றல்
2. பூஜை
3. வரவேற்புரை - மன்றத் தலைவர்
4. கணினி வரைகலை
5. புஷ்பாஞ்சலி
6. பஜனை (தரம் 6 - 11)
7. பரிசளிப்பு (தரம் 1 - 5)
8. கோபியர் நடனம்
9. பேச்சு (தரம்-2)
10. ஜதி நடனம் (தரம் - 12)
11. பரிசளிப்பு (தரம் 6 - 9)
12. அதிபர் உரை
13. வேப்பிலை நடனம்
14. பஜனை (தரம் 6 - 11)
15. பரிசளிப்பு (தரம் 10 - 13)
16. பிரதம அதிதி உரை
17. ஆத்மா இதழ் வெளியீடு
18. நினைவுச் சின்னம் வழங்கல்
19. நாடகம்
20. நன்றியுரை
21. தேசிய கீதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவராத்திரி போட்டி நிகழ்ச்சி முடிவுகள்

## தரம் - 1

**தேவாரம்**

R. அபிலாஷ் - 1
T. லக்ஷான் - 2
T. ஜெயந்தன் - 3

**பேச்சு**

S. மித்ரேஸ் - 1
S. மயூரன் - 2
K. கவிலாஹ் - 3

**கோலம்**

T. ஹஸ்வந்த் - 1
R. லுகேஷ் - 2
M. தேவதர்ஷன் - 3

## தரம் -2

**தேவாரம்**

B. சமிக்ஷன் - 1
S. சமிக்ஷன் - 2
K. தனுஷ்கர் - 3
A. பிரகாஷ் - 3

**பேச்சு**

K. அருஷாந்த் - 1
S. மிரோஷன் - 2
A. மிதுனேஷ் - 3

**கட்டுரை**

S. ஆதிஸ் அக்ஷயன் - 1
A. பிரகாஷ் - 2
S.K கவினாஷ் கிஹறன் சிக் - 3

**கோலம்**

Y. ரின்கேஷ் - 1
M. பவித் லக்ஷான் - 2
P. தனுஜன் - 3
K. கவினாஷ் - 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம் 3

தேவாரம்

S. கவிஷ்வின்த் - 1
S. சர்வேஷ் - 2
B. சயோன் - 3
R. பிரனீதன் - 3

பேச்சு

T. பிருந்தாவனன் - 1
N. ஹரிகரன் - 2
S சிகர்ஜிதன் - 3

கட்டுரை

M. கவிஷ்கர் - 1

கோலம்

R. பிரனிதன் - 1
T. சயோன் சமிர்கான் - 2
S. ஹரிதரன் - 3

## தரம் -4

பஞ்சபுராணம்

S. சிருஸ்விந்தன் - 1
S. ஹரிகேஷன் - 2
P. இஹரான் - 3
J. தவிஷன் - 3

பேச்சு

V. ஹரிதன் - 1
T. கிருஸ்விந்த் - 2
D. கிருத்திக் - 3
S. மதிலேஸ் - 3

கோலம்

S. சனுக்ஸ்கவின் - 1
M. லத்தீஸ் - 2
L. நிவேஸ்கர் - 3
A. தாமின் கோஷன் - 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம் 5

பஞ்சபுராணம்

| | | |
|---|---|---|
| T. | மதுஷான் | - 1 |
| G. | பிரனேஷ் | - 2 |
| S. | ரக்ஷிகன் | - 3 |
| S. | திவாகரன் | - 3 |

பேச்சு

| | | |
|---|---|---|
| M. | கீர்த்திகன் | - 1 |
| L. | கிதுர்ஷன் | - 2 |

கோலம்

| | | |
|---|---|---|
| N. | ஜினேஸ்கர் | - 1 |
| Y. | வினோதன் | - 2 |
| S. | கவினேஸ் | - 3 |
| S. | சர்வேஸ்வர் | - 3 |

## தரம் 6

பஞ்சபுராணம்

| | | |
|---|---|---|
| S. | யுகலக்ஷிதன் | - 1 |
| C. | லவன் | - 2 |
| A. | அஸ்வின் | - 3 |

பேச்சு

| | | |
|---|---|---|
| K. | லக்ஷன் | - 1 |
| L. | ருக்ஷான் | - 2 |
| C. | லவன் | - 3 |

கட்டுரை

| | | |
|---|---|---|
| K. | ஹரிபிரதாப் | - 1 |
| S. | சுப்பிரநாத் | - 2 |
| M. | பிரவீன் | - 3 |

கோலம்

| | | |
|---|---|---|
| T. | பிரேந்திரநாத் | - 1 |
| N. | கனிஸ்கன் | - 2 |
| K. | அரிபிரதாப் | - 3 |
| S. | சுப்ரனாத் | - 3 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம் 7

பஞ்சபுராணம்

| | | |
|---|---|---|
| N. | ருத்ரவாணன் | - 1 |
| C. | யுவன்ஸ்ரீ | - 2 |
| P. | இளங்கோவன் | - 3 |
| G. | அபிஷேக் | - 3 |

பேச்சு

| | | |
|---|---|---|
| P. | இளங்கோவன் | - 1 |
| N. | ருத்திரவாணன் | - 2 |
| M.P. | ஸ்ரீமன் | - 3 |
| G. | அபிஷேக் | - 3 |

கட்டுரை

| | | |
|---|---|---|
| L. | சபேஷ் | - 1 |
| C. | யுவன்ஸ்ரீ | - 2 |

கோலம்

| | | |
|---|---|---|
| S. | செஹான் கதுர்ஷன் | - 1 |
| K. | வினோதனகிரிஷான்த் | - 2 |
| M.D. | விஸ்வஜித் | - 3 |
| S. | பரத் | - 3 |

## தரம் 8

பஞ்சபுராணம்

| | | |
|---|---|---|
| K. | லதுர்ஷன் | - 1 |
| S. | ஸ்ரீமியுலாஸ்ரீஹ் | - 2 |
| I. | கோகுலன் | - 3 |

பேச்சு

| | | |
|---|---|---|
| R. | கபிலேஷ் | - 1 |
| R. | கிரிஷ்ந்தன் | - 2 |
| P. | ருஷாந்தன் | - 3 |

கட்டுரை

| | | |
|---|---|---|
| K. | சஞ்ஜெய் | - 1 |
| R. | கபிலாஷ் | - 2 |
| S. | அகிலத் | - 3 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம் 8

கோலம்

| | | |
|---|---|---|
| R. | பிரஸான்த் | - 1 |
| S. | சச்சின் | - 2 |
| R. | சாமிலன் | - 3 |
| P.. | ருஷான்தன் | - 3 |

## தரம் 9

பஞ்சபுராணம்

| | | |
|---|---|---|
| M. | சிதுர்ஷன் | - 1 |
| C. | சதுர்ஷன் | - 2 |
| S. | சுதீப்குமார் | - 3 |

பேச்சு

| | | |
|---|---|---|
| M. | சதுஷன் | - 1 |
| S. | தசிகரன் | - 2 |
| J. | தருன் | - 3 |
| R. | மதுகான் | - 3 |

கட்டுரை

| | | |
|---|---|---|
| N. | டிவாணன் | - 1 |
| M. | அபிராம் | - 2 |
| G. | அஸ்வின் பிரசன்னா | - 3 |

கோலம்

| | | |
|---|---|---|
| K. | உதேஷன் | - 1 |
| S. | சரன் | - 2 |
| K. | நிதர்ஷன் | - 3 |
| R. | இனோஷன் | - 3 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரம் 10T/ 10E

பஞ்சபுராணம்

| | | |
|---|---|---|
| P. | திவாகர் | - 1 |
| R. | தினுஸ்காந் | - 2 |
| M. | கோஹிநிசுதனனன் | - 3 |

பேச்சு

| | | |
|---|---|---|
| S. | ஷவின் | - 1 |
| V. | டிலுக்ஷன் | - 2 |
| W. | லக்ஷான் | - 3 |

கட்டுரை

| | | |
|---|---|---|
| S. | ஷவின் | - 1 |
| Y. | கனுஷ்கர் | - 2 |
| P. | திவாகர் | - 3 |
| A. | பிரஜிவணன் | - 3 |

கவிதை

| | | |
|---|---|---|
| Y. | கனுஷ்கர் | - 1 |
| V. | டிலுக்ஷன் | - 2 |
| T. | சரண் | - 3 |

திருக்குறள்

| | | |
|---|---|---|
| P. | ஹரிகரன் | - 1 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம் 11T/ 11E

பஞ்சபுராணம்

| | | |
|---|---|---|
| Y. பிரவின் | - 1 |
| K. தினேஸ் | - 2 |
| N. சுதர்ஸன் | - 3 |

பேச்சு

| | |
|---|---|
| K. தினேஸ் | - 1 |
| M. அகஷ்கர் | - 2 |
| M. லக்ஷானஹரிசிவாக் | - 3 |

கட்டுரை

| | |
|---|---|
| V. ரக்ஷான் பிரதீப் | - 1 |
| A. அகிலேஷ் | - 2 |
| D. யுகேஷ் | - 3 |

கவிதை

| | |
|---|---|
| J. தில்ஷான் | - 1 |
| S. அருண்ஷாந்த் | - 2 |
| H. அர்ஜுன் | - 3 |

திருக்குறள்

| | |
|---|---|
| A. அகிலேஷ் | - 1 |
| M. அகஷ்கர் | - 2 |
| K. கிருஷோன் | - 3 |
| Y. பிரவின் | - 3 |

## தரம் 12T வர்த்தகப் பிரிவு

பஞ்சபுராணம்

| | |
|---|---|
| A. வித்தியாசாகர் | - 1 |
| M. அமணன் | - 2 |
| T. அபிஷேக் | - 3 |

பேச்சு

| | |
|---|---|
| B. தக்ஷிகான் | - 1 |

கட்டுரை

| | |
|---|---|
| Y. புஷ்பநாத் | - 1 |
| S. ஆகாஷ் | - 2 |
| B. தக்ஷிகான் | - 3 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம் 12T கலைப் பிரிவு

கட்டுரை

S. பிரதீப்குமார் - 1
R. நிஷாந்தன் - 2
P. S. உஸ்டீவன் - 3

## தரம் 12T விஞ்ஞானப் பிரிவு

பேச்சு

B. அபினாஷ் - 1

கட்டுரை

S. யதுர்ஷனன் - 1
A. அருண் - 2
B. அபினாஷ் - 3

திருக்குறள்

A. அருண் - 1

## தரம் 13T வர்த்தகப் பிரிவு

பஞ்சபுராணம்

S. பிரவீன் - 1
R. கிருஷ்ணகுமார் - 2
S. சரண்ராஜ் - 3

கட்டுரை

V. விவேகானந்தர் - 1
S. நிஷாதரன் - 2
S. பிரவீன் - 3

## தரம் 12T கலைப் பிரிவு

பஞ்சபுராணம்

K. புஸ்பகாந்த் - 1
K. கமலரூபன் - 2

கவிதை

K. புஸ்பகாந்த் - 1
R. கிருஷாந்த் - 2
V. விஜய கிருஷான்த் - 3

கட்டுரை

M. சஸ்டிபிரகாஷ் - 1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர் மஞ்சரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியும் கடவுளும்

(01) கல்வி எல்லாச் செல்வங்களிலும் சிறந்தது

(02) கல்வியால்தான் மனிதன் முழுமை அடைகிறான்

(03) கல்விச்செல்வம் பெருக கடவுள் கருணை வேண்டும்

(04) எனவே நாம் கடவுளை முழு மனதுடன் வணங்க வேண்டும்

(05) கோவில் வழிபாட்டில் முழுமையாக ஈடுபடுதல் கடவுள் நம்பிக்கையை வளர்க்கும்

(06) நவராத்திரி காலங்களில் முப்பெரும் தேவிகளுக்கு விரதம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

(07) கடைசி மூன்று நாட்களும் கல்வியை தரும் சரஸ்வதிக்காக விரதம் அனுஷ்டிக்கப்படும்

(08) நாவராத்திரி காலத்தில் மட்டுமல்லாது எல்லா காலங்களிலும் கடவுளை வணங்குவோம்

செல்வன் ஆ.தாயின் கோஸன்
தரம் 04 T

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரோக்கியமான வாழ்வு

இன்றைய சிறுவர்கள் நாட்டின் நாளைய தலைவர்கள் என்ற கூற்றிற்கிணங்க ஆரோக்கியமான சுறுசுறுப்பான பிள்ளைப்பருவமே எதிர்காலத்தில் சிறந்த தலைவர் களை உருவாக்கும். சிறந்த ஆரோக்கியமான பிள்ளைகளால் மட்டுமே ஆரோக்கியமான சமுதாயத்தை கட்டியெழுப்பவும் முடியும்.

ஆரோக்கியமான பிள்ளைகளின் ஆரோக்கியமான வாழ்க்கை ஒரு மனிதனை முழுமையாக்கும். அந் நிறைவான வாழ்க்கைக்கு அத்திவாரமே பிள்ளை பருவம். உள ரீதியாகவும், உடல் ரீதியாகவும் சுறுசுறுப்பான ஆரோக்கிய வாழ்வை பெற்றுத் தருகிறது. சிறந்த உணவுப்பழக்கம், சிறந்த சூழல். தூய எண்ணங்கள், சிறந்த நடத்தை கோலங்கள் என்பன பிள்ளை பருவத்தில் பிள்ளைகளுக்கு மனரீதியாகவோ உடல் ரீதியாகவோ பாதிப்பு ஏற்பட்டால் அது பிள்ளைகளின் எதிர் கால வாழ்க்கையை சீர்குலைக்கும். பிள்ளை பருவத்தில் பிள்ளைகளுக்கு ஆரோக்கியமான உணவு, பழக்கத்தை கடைபிடிக்க பெற்றோர்கள் வழி வகுக்கவேண்டும், காரணம் இப்பருவத்தில் பிள்ளைகள் சுறுசுறுப்பாக இயங்க கூடியவர்களாக விளங்குகின்றனர்.

'நோயற்ற வாழ்வே குறையற்ற செல்வம்'

என்பதனை அடிப்படையாகக் கொண்டு, வெள்ளி தங்கத்திற்கு எப்போதும் நிகராது. எனவே சுறுசுறுப்பான பிரஜைகளை உருவாக்குவதோடு நாட்டின் மனிதவளங்களையும் மேம்படுத்துவோம்.

செல்வன்.D.நிரோஷ்
தரம் 7T

# திருஞானசம்பந்தர்

திருஞானசம்பந்தர் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவர். அவர் சீர்காழி எனும் ஊரில் பிறந்தார். மூன்று வயதில் 'தோடுடைய செவியன்' என்ற தேவாரத்தை பாடினார். ஞானப்பாலை உண்ட பெருமை சம்பந்தருக்கு உண்டு. சம்பந்தர் போன்றோர் பாடிய தேவார திருவாசகங்கள் தான் இன்று சைவத்தின் உயிர் மூச்சு.

செல்வன்.S. ஆதீஸ் அக்ஷயன்
தரம் 7 T

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விபூதி

சிவசின்னங்களுள் விபூதியும் ஒன்றாகும்.

விபூதியை திருநீறு என்று கூறுவர்.

சைவ சமயிகளை அடையாளப்படுத்துவது விபூதி

பசுவின் சாணத்தால் திருநீறு செய்யப்படும்

திருநீறு அணியும் போது சிவ சிவ கூறுதல் வேண்டும்.

செல்வன் க.ஹர்ஷாந்
தரம் 3 T

## விரதங்களை கடைப்பிடிப்போம்

விரதங்களை அனுட்டிப்பதன் மூலம் பல நற்பண்புகள் வளர்க்கப்படுகின்றன. மனம் ஒரு நிலைப்படுத்தப்படுகின்றது. பாவங்கள் குறைகின்றன. மனம் அமைதி பெறுகின்றது. அதனால் தூய சிந்தனை, பணிவு மன வலிமை, கடவுள் பக்தி முதலான விழுமியப் பண்புகள் வளர்க்கப்படுகின்றன. அத்துடன் உடல் நலமும் பேணப்படுகின்றது.

செல்வன்.தி. பிருந்தாவன்
தரம் 3 T

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பஞ்சம் போக்கிய படிகாசு

திருவீழிமிழலை என்று ஒரு ஊர். ஒரு முறை அங்கு மழை பெய்யவில்லை. பெரும் வரட்சி, எங்கும் பஞ்சம், பஞ்சத்தால் மக்கள் வருந்தினர்.

திருவீழிமிழலைக்குத் திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் வந்தனர். அவர்களுடன் அடியார் கூட்டமும் வந்தது. அவர்கள் இறைவனிடம் படிக்காசு பெற்று அவ்வூர் மக்களின் பஞ்சத்தைப் போக்கினர்.

செல்வன்.S.K. கவினாஷ்கிஹரன்சித்
தரம் 2 T

## சிவசின்னங்கள்

(01) சிவபெருமானைக் குறிக்கும் அடையாளங்கள் சிவ சின்னங்கள் எனப்படும்

(02) விபூதி, உருத்திராக்கம் என்பன சிவசின்னங்கள் ஆகும்

(03) சிவசின்னங்கள் அணிவது சைவ சமயத்தவரின் கடமையாகும்

(04) 'சிவசிவ' என்று சொல்லித் திருநீறு பூச வேண்டும்

(05) கை, கால், முகம் கழுவிய பின்பும் நீராடிய பின்பும் திருநீறு பூசுவோம்.

செல்வன்.A. பிரகாஷ்
தரம் 2 T

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவராத்திரி விரதம்

புரட்டாதி மாதம் சுக்லபக்ஷப் பிரதமை திதி முதல் நவமி வரை வரும் ஒன்பது நாட்கள் வரை நவராத்திரி விரதம் அனுஷ்டிக்கப்படும், இந்த அற்புதமான விரதம் தேவி விரதங்களுள் சிறந்த விரதமாகும்.

முதல் மூன்று நாட்களிலும் வீரத்தையும் தைரியத்தையும் வேண்டி துர்க்கையை வழிபட வேண்டும். அடுத்து மூன்று நாட்களிலும் செல்வத்தை வேண்டி மஹாலட்சுமியை வழிபட வேண்டும். இறுதி மூன்று நாட்களிலும் கல்வி, அறிவு, கலை ஞானங்கள் வேண்டி சரஸ்வதியை வழிபட வேண்டும்.

ஒன்பது நாள் என்கின்ற கணக்கில் சிலசமயம் குறைவுபடுகின்ற சந்தர்ப்பத்தில் எந்தெந்த தேவியார்க்கு எத்தனை நாட்கள் என்ற பிரச்சினை எழும் அதை நீக்குவதற்கு வேறொரு விதியும் சொல்லப்பட்டுள்ளது. சரஸ்வதியை மூல நட்சத்திரத்தில் ஆவாஹணம் செய்து திருவோண நட்சத்திரத்தில் உத்வாசனம் செய்ய வேண்டும், அதனை மனதில் இருத்தி, துர்க்கை லட்சுமி ஆகிய இரு தேவியருக்குப் நாட்களை பிரித்துக் கொள்ளலாம்.

ஆலயங்களில் விஷேட கொலு மண்டபம் அமைத்து நடுவே நவராத்திரி விசேட கும்பத்தை நவராத்திரி முதல் நாள் காலையில் ஆரம்பித்து சிறப்பான வழிபாடுகள் செய்யப்படுகின்றன. பாடசாலைகளிலும். நவராத்திரி கும்பம் வைத்து சுற்றிவர நவதானியம் முளைக்க வைத்து கொலு வைத்து வழிபாடுகள் செய்கின்றனர், வீடுகளில் நவராத்திரி விரதம் விஷேடமாக கொண்டாடப்படகின்றது. 10ம் நாள் விஜயதசமியன்று காலை ஆலயங்கள் பாடசாலைகளில் சிறுபிள்ளைகளுக்கு முதன் முதலாக வித்யாரம்பம் செய்யப்படுகின்றது. ஆலயங்களில் 10ம் நாளாகிய விஜயதசமியன்று மஹிஸாசுரவதம், வாழை வெட்டுதல். என்பன புராணக்கதைகளை நினைவூட்டும் வகையில் நடத்தப்படுகின்றன.

நவராத்திரி விரதத்தை முறையாக கைக்கொள்ள விரும்புவோர் பகலில் உணவின்றி இரவில் பூசை முடித்த பின் பால், பழம், பலகாரம் என்பன சாப்பிட்டு நவமியில் உபவாச விரதம் இருந்து பத்தாம் நாள் விஜயதசமி அன்று காலை எட்டரை மணிக்கு முன்பு பாறனை முடிக்க வேண்டும். நவராத்திரி வழிபாட்டை பக்தி சிரத்தையுடன் தேவியே சரணாகதி என்று நினைத்து வழிபட்டால். வெற்றி, செல்லம். கல்வி பெற்று வாழ்வை மேன்மைபடுத்தி இறுதியில் தேவியின் மோட்சமும் கிடைக்கும்.

செல்வன். ஜினேஸ்கர்
தரம் 5 T

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரதம்

சைவ சமயத்தவர்களாகிய நாம் பிறந்ததிலிருந்து இறைவனுக்கு எவ்வளவோ சடங்குகளை மேற்கொள்கின்றோம். அவை ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு பிண்ணனி உண்டு. அவற்றில் ஒன்றே விரதம் ஆகும். நாம் எமது வாழ்வை சிறப்பாக கொண்டு செல்ல மன அமைதி, மனவலிமை இறையுணர்வு என்பன அவசியமாகும். இதற்காகவே விரதங்கள் எமக்கு உதவுகின்றது. இது மட்டுமன்றி ஆன்மீக துறையில் முன்னேறவும் உதவுகின்றது.

விரதம் என்பது மனம் பொறிவழிப் போகாது நிற்றற்பொருட்டு உணவை விடுத்தேனும் சுருக்கியேனும் மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றினாலும் இறைவனை மெய்யன்போடு விதிப்படி வணங்குதல் ஆகும். விரதத்தில் பல வகையுண்டு. அவற்றுள் சிவ விரதம், சக்தி விரதம், விநாயக விரதம், சுப்பிரமணிய விரதம். முக்கியமானவைகளாகும். இவற்றுள் மகாசிவராத்திரி சாரத நவராத்திரி. ஆவணிச் சதுர்த்தி, திருக்கார்த்திகை ஆகியன குறிப்பிடத்தக்க விரதங்களாகும். நோன்பு, உபவாசம் என்பன விரதத்துடன் தொடர்புபட்ட சொற்களாகும், விரதம் 6 அல்லது 12 வருடங்கள் அனுட்டிக்கப்படும்.

விரதத்திற்கான சில விதிமுறைகளும் உண்டு. அவையாவன வீடுகளையும் சுற்றுப்புற சூழலையும் தூய்மைப்படுத்தி அதிகாலை எழுந்து நீராடி தோய்துலர்ந்த ஆடையணிதல், இறைவழிபாடுகளில் ஈடுபடல், ஆலயங்களுக்கு செல்லல், தோத்திரம் ஓதுதல் உணவை தவிர்த்தல் அல்லது குறைத்தல், மனஅமைதி பேணுதல் மந்திரங்கள் உச்சரித்தல் உறங்காமல் இருத்தல். விரத காலங்களில் எந்நேரமும் நாம் இறைவனை அனுகியிருத்தல் கட்டாயமானதாகும். விரதங்களின் போது விரத முடிவில் தூய்மையான பாத்திரத்தில் இறைவனுக்கு நிவேதனமாக்கி பின் நாம் உறவினர்களோடு சேர்ந்து உண்ணுகிறோம்.

விரதங்கள் அநுட்டிப்பதன் மூலம் மன அமைதி, சுத்தம், ஒழுக்கம், நேர்மை, சகிப்புத்தன்மை, தியாகம், அன்பு, பக்தி, பணிவு, தன்னம்பிக்கை, ஒற்றுமை ஆகிய சிறந்த பண்புகளும் இறைவனின் பக்தியும் கிடைக்கும். ஆகவே நாமும் விரதங்களை அநுட்டித்து பயன் பெறுவோம்.

செல்வன்.V. டிலூாஷன்
தரம் 10 T

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவராத்திரி வழிபாடு

நவராத்திரி பூஜை என்பது ஒன்பது நாட்கள் இரவில் கொண்டாடப்படுகிற பூஜை ஆகும். பொதுவாக நவராத்திரி பூஜை வருடத்திற்கு ஒருமுறை கொண்டாடப்படவேண்டும் என சாஸ்திரம் கூறுகிறது.

சிவனை வழிபட தகுந்த ஒரு இராத்திரி அது சிவராத்திரி ஆகும். சக்தியை வழிபடத் தகுந்தது நவராத்திரி. நவம் என்பது ஒன்பது நவராத்திரி என்பது வீட்டில் பத்து நாட்கள் கொண்டாடப்படுகிறது. அம்பாளுக்குரிய பண்டிகைகள் எவ்வளவோ இருந்தாலும் முக்கியமானது ஒன்பது நாட்கள் கொண்டாடப்படும் மிகச் சிறப்பு வாய்ந்த நவராத்திரி ஆகும்.

புரட்டாதி மாதம் வளர்பிறை பிரதமையில் தொடங்கி விஜயதசமி நவராத்திரியில் முடிகிறது. முதல் மூன்று நாட்கள் துர்க்கை வழிபாடு அடுத்த மூன்று இலட்சுமி வழிபாடும் இறுதி மூன்று நாட்கள் சரஸ்வதி வழிபாடு ஆகும்.

நவராத்திரியின் போது இந்த மூன்று தேவியாரையும் முறையாக வழிபடுகிறோம் ஒரு தேவியை முதன்மையாகவும் மற்றவர்களை பரிவார தெய்வங்களாக வழிபடவேண்டும்.

துர்க்கையானவள் வீரத்தின் தெய்வம் இவள் நெருப்பின் அழகுடன் ஆவேச பார்வை உடையவள். சிவப்பிரியையான துர்க்கை இச்சா சக்தி, 'கொற்றவை' என்றும் 'காளி' என்றும் அழைப்போம்.

லட்சுமிதேவி செல்வத்தின் தெய்வம் மலரின் மென்மையுடனும் அருள் பார்வையுடனும் அழகாக விளங்குகிறாள். இவள் விஷ்ணு பிரியை, லட்சுமியின் அமுதத்தில் தோன்றியவள் அமுதமானவள். பொன்னிற மேனியுடன் கமலாசணத்தில் வீற்றிருக்கிறாள். இவள் செல்வத்தை தந்து வறுமையை அகற்றுபவள்.

சரஸ்வதிதேவி கல்வியின் தெய்வம் இவள் அமைதி பார்வையுடன் வைரத்தின் அழகுடன் அழகாக பிரகாசிக்கின்றாள். நவராத்திரியின் ஆறாவது, ஏழாவது நாளில் மூல நட்சத்திரம் உச்சமாக இருக்கும் போது சரஸ்வதி வணக்கம் கூறுவது முறையாகும். இது தேவியின் அவதார நாள். சரஸ்வதி பூஜை சிரவணம் என்ற நட்சத்திர உச்சமான நாளில் முடிவடைகிறது பத்தாம் நாள் ஆயுத பூஜை ஆகும்.

நவராத்திரியின் எட்டாம் நாள் மகாஷ்டமி அதாவது துர்காஷ்டமி என்றும் ஒன்பதாம் நாளை மகா நவமி என குறிப்பிடுவது வழக்கம். ஒன்பது நாட்கள் மகிடாசுரனுடன் போரிட்ட தேவி பத்தாம் நாள் அவனை அம்பெய்து கொன்றாள். இந்த நாள் விஜயதசமி என்கிற வெற்றிதரும் நாள். பல குழந்தைகள் கல்வியினை இந்நாளிலே ஆரம்பிப்பர். அன்று தொடங்கும் அனைத்துக் காரியமும் வெற்றி தரும் என்பது நம்பிக்கை.

'எனவே நாமும் விரதமிருந்து முப்பெரும் தேவியரின் அருள் பெறுவோம்'

செல்வன் க.லக்சன்
தரம் 6T

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து மக்களும் நவராத்திரி விரதமும்

'ஓம் சம்போமகாதேவாய நமச்சிவாய நாதம் பரவட்டும்'

அன்பின் அழகுருவுடைய எம்பெருமான் ஆறறிவுடைய மானிடராய் எம்மை பூலோகத்தில் படைத்ததன் நோக்கம் ஒழுக்கமும் சிவமயமும் பேணி முத்திப்பேற்றினை எய்தி சாந்தியடையும் ஆன்மாக்கள் மூலம் புனிதமும் புண்ணியமும் வாசம் பண்ணும் தேவலோகம் மென்மேலும் வளம்பெற்று வளரும் என்பதே. இறைவனின் நோக்கத்தை நிறைவேற்ற எமக்கு பலவழிகளை அந்த ஆண்டவனே எமக்கு தந்துள்ளார். அவ்வழிகளில் தெய்வ ஆராதனை முறை மேன்மையும், முக்கியமும், பிரபல்யமும் வாய்ந்தது. இம் முறையிலே அமைய பெற்றுள்ள விரதம் கலிகால மானிடனுக்கு மனதில் நல்லெண்ணம் உதிக்க காரணமான ஒருவழிப்பாட்டு முறையாகும்.

பூலோகத்தின் ஆரம்பத்திலே வாழ்ந்து வந்த மக்களுக்கும், முனிவர் தேவர்களுக்கும் விரோத செயல்களையும், அழிவுகளையும் விளைவித்தவன் மகிஷாசூரன். அவனுடைய இன்னல்கள் தாங்காத மக்கள் கைலாயத்தேவி பார்வதிதேவியிடம் முறையிடுகின்றனர். அங்கனம் ஆதிபராசக்தி மக்களுக்கும் ஏனைய ஜீவராசிகளுக்கும் விடுதலையளிப்பதட்கும், வாழ்வியல் தத்துவங்களை உணர்த்துவதற்கு இச்சா கிரியா ஞானாசக்திகளின் ரூபமாய் தன்னுடைய அம்சங்களை மலைமகள், அலைமகள், கலைமகள் ஆகிய முப்பெருந்தேவியரையும் தோற்றுவித்து மூன்று தேவியர்களுக்கும் மும்மூன்று தினங்களையும் கொடுக்கிறன்றனர். இம் மூன்று தினங்களில் தேவியர் மூவரும் மகிஷாசூரனை வதைத்து, தைரியம், செல்வம்,கல்வி என்பவற்றின் வாழ்க்கை முக்கியத்துவத்தை உணர்த்தி ஒன்பது நாட்களும் முடிந்த பத்தாவது தினம் மகிஷாசூரனை சம்ஹாரம் செய்தனர்.

இந்த அருட் செயலை நினைவாக கொண்டு பாரம்பரிய மரபாக மஹா வழிபாடாக இந்துக்கள் கொண்டாடுகின்றனர். புரட்டாதி மாதத்திலே நவராத்திரி ஆரம்பம் கண்டு தம் இல்லங்களை தூய்மைபடுத்தி பெரியவர் முதல் சிறியர்வரை முதல் மூன்று நாட்களில் துர்க்கைதேவிக்கும் அடுத்த மூன்று நாட்கள் லக்ஷ்மி தேவிக்கும் இறுதி மூன்று சரஸ்வதி தேவிக்குமாக தினந்தோறும் பூஜை வழிபாடுகள் நடத்தி கூட்டுபிராத்தனை செய்து விரதமிருந்து இறுதி பத்தாவது தினம் அதாவது விஜயதசமி தினத்தன்று ஏடு தொடக்கல் மற்றும் கல்வி நடவடிக்கைககளுக்கு முன்னுரிமை வழங்கி அன்றைய தினத்தின் வழிபாட்டுடன் நவராத்திரி விரதத்தை பூர்த்தி செய்வர். பொதுவாக ஆலயங்களில் கும்பம் வைத்து கொலுவைத்து நவதானியம் விதைத்து ஆரம்பம் முதல் இறுதிவரை விசேட பூஜை ஆராதனைகள் நடத்தி அம்மனை குளிர்த்தி மகிழ வைத்து சிறப்பாக கொண்டாடுவார். பாடசாலைகளிலும் இந்நிகழ்வுகள் நடைபெறும்.

நவராத்திரியில் இடம்பெறும் ஒவ்வொரு அம்சமும் எமக்கு வாழ்வில் தைரியம், மங்களமும் செல்வமும் கல்வியும் மற்றும் பொறுமையும் பக்திக் கட்டுப்பாடு நிம்மதி இரக்கம் போன்றவற்றை ஏற்படுத்தி எம்மை தூய மனமுடையவனாக மாற்றுகிறது. எனவே பாவங்களை போக்கி நாமும் தூய மனமுடைய நல்ல ஆத்மாவாக இறைவனுக்கு வழிபாடு செய்து தேவியின் அருளுடன் நீடூழி வாழவேண்டுமாக.

சிவமயம் பரவட்டும்

செல்வன் ச.ஷவீன்
தரம் 10T

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாவருக்குமாம் உண்ணும் போது ஒரு கைப்பிடி

சைவ நெறி, தான தருமங்களைச் செய்வதற்கு ஊக்குவிக்கிறது. தானங்களில் பலவகை உண்டு. அவற்றுள் உணவு, உடை, நீர் என்பவற்றைத் தேவைப்படுவோருக்கு தானமாக வழங்குதல், மிக உயர்வான தானம் என்று சொல்லப்படுகிறது. 'யாவருக்குமாம் உண்ணும் போது ஒரு கைப்பிடி' என்கிறார் திருமூலர். தினமும் ஒருவருக்கு உணவளிக்காது உண்பது பாவம் என்று கருதப்படுகின்றது. இல்லறத்தார், சமையல் செய்த பின் யாராவது உணவு உண்ண வருவார்களா என்று எதிர்பார்த்து வீட்டு வாயிலில் நிற்கும் வழக்கம் முற்காலங்களில் இருந்தது.

எத்தகைய உணவானாலும் முதலில் இறைவனுக்கு அர்ப்பணித்து உணவு கிடைக்கச் செய்தமைக்காக இறைவனுக்கு நன்றி செலுத்திவிட்டு உண்ணுதல் சைவ மரபு. இறைவனுக்கு நன்றி அர்ப்பணம் செய்த உணவு அமிர்தமாகிறது; அவ்வாறு அர்ப்பணிக்காத உணவு நஞ்சாகிவிடுகின்றது. புரட்டாதி மாதம் சனிக்கிழமை விரதம் பிடிப்பவர்கள் காகத்திற்கு உணவு வைத்து உண்ணும் பழக்கத்தை இன்று வரை கடைப்பிடித்து வருகிறார்கள். இவையெல்லாம் 'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும்' சைவர்களின் பழக்க வழக்கங்களை எடுத்துக் காட்டுகின்றது. ஆனால், இன்று நிலைமை மாறி வருகின்றது நலிந்தோர், ஊனமுற்றோர், ஏழைகள், பசித்து வருவோர், ஆதரவற்றோர் ஆகியோருக்கு அன்னம், வஸ்திரம், ஆடை என்பவற்றை உபசரித்து ஆதரவு அளிக்க வேண்டியது, சைவசமயக் கடமையாகும்.

இத்தகைய தான தர்மங்களைச் சைவ மக்கள் செய்யாமல் விடுவதாலேயே சைவசமயத்தில் சமூக சேவைக்கு இடமளிக்கவில்லை என்று வீணாக குற்றஞ் சுமத்தப்படுகிறது. உண்மையில், சைவசமயத்தில் தான் சமூகப் பணிகளுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருக்கிறது. தானம் செய்தல், தருமஞ் செய்தல், அறஞ் செய்தல் என்பன சைவ சமயத்தில் பெரிதும் வலியுறுத்தப்படுகிறது. அன்னதான மடங்களிலில்லாத கோயில்களே இல்லை. அன்ன சத்திரங்கள் இல்லாத ஊர்களே இல்லை. இவையெல்லாம் சைவப் பண்பாட்டின் அங்கங்கள்.

என்னதான் இறைவழிபாடு செய்தாலும் பூசை கிரியைகள் புரிந்தாலும் புனித யாத்திரைகளை மேற்கொண்டாலும்: புண்ணிய தீர்த்தங்கள் ஆடிவந்தாலும் தான தருமங்கள் செய்யாவிட்டால், அவற்றால் ஒரு பயனும் கிடைக்கப் போவதில்லை.

"தானத்தால் உயர்ந்த தானம் அன்னதானம்"

செல்வன் மு. சஸ்டிபிரகாஸ்
தரம் 13 T கலைப்பரிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீப வழிபாடு

பூஜைகளுக்கு ஏற்றப்படும் விளக்கு பித்தளை, செம்பு, வெள்ளி எனும் உலோகங்களினால் அமைய வேண்டும். 'எவர் சில்வர்' பயன்படுத்தக்கூடாது இதில் விளக்கேற்றினால் தரித்திரம், வறுமை உண்டாகும். பித்தளை விளக்குகளைப் பயன்படுத்த முடியாதவர்கள் மண் அகல்களைப் பயன்படுத்தலாம். அதில் தவறேதும் இல்லை.

திருவிளக்கில் 5 சுடர்கள் இருக்க வேண்டும் 5 சுடர்களையும் ஏற்றுவது சிறந்தது. நாள்தோறும் வழிபாட்டில் ஒரு சுடர் போதுமானது. தீபத்திற்கு சிறந்தது நெய் ஆகும். நெய்விளக்கு ஏற்றி வழிபட்டால் குலம் தழைக்கும். நல்லெண்ணெய் மகா லட்சும் ஆகும். தேங்காய் எண்ணெய் விநாயகருக்கு சிறப்பு ஆகும். இலுப்பை எண்ணெய் நெய்க்கு சமமானது.

பஞ்சினால் திரியிடலாம். தாமரைத் தண்டின் நூலினால் திரியிடலாம். இது மிகச் சிறப்பானது. விளக்கின் பாதத்தில் பூ வைக்கலாம் திருவிளக்கின் மேல் பூ வைத்தால் பூ கருக வாய்ப்புண்டு.

விளக்கு ஏற்ற சிறந்த எண்ணெய் வகைகள்

1. நெய் - சகல செல்வமும் பெருகும்.
2. நல்லெண்ணெய் - எல்லாத் துன்பமும் விலகும்.
3. தேங்காய் எண்ணெய் - சகல சம்பத்தும் உண்டாகும்.

கடலை எண்ணெயில் விளக்கேற்றக் கூடாது.

செல்வன் ம. சதுஷன்
தரம் 9 T

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யார் அந்த அக்னி

விஷ்ணு புராணத்தின்படி அக்னி பிரம்மாவின் முதல் புதல்வன் எனக் காண்கின்றோம். புராணங்களில் பல இடங்களில் வெவ்வேறு விதமாக அக்னியின் பிறப்பைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது. பாகவத்திலும் மகாபாரதத்திலும் பிரம்மாவின் புதல்வன் என்றே கூறப்பட்டுள்ளது.

அக்னி சுவாஹா என்ற பெண்ணை திருமணம் செய்து கொண்டார் அவர்களுக்கு பாவகன், பவமானன், சுசி என்ற குழந்தைகள் பிறந்ததாகவும் அவர்கள் ஞானத்திலும் ஆற்றலிலும் மிகச் சிறந்தவர்களாக விளங்கினார்கள் என்று கூறப்பட்டுள்ளது. பாகவர் மின்னல் ரூபத்திலும் பவமானர் இரண்டு பொருள்கள் உராய்வில் ஏற்படும் அக்னியாகவும் சுசி அண்டவெளியின் அக்னியாகவும் உள்ளனர். இவ்வாறு இவர்கள் தம் தந்தை அக்கினியின் மூன்று வெளிப்பாடாக இருப்பதாக வாயு புராணம் கூறுகின்றது.

இந்த அக்னியின் மூன்று மகன்களின் ரூபங்களும் மனிதனிடம் உடல் மனம் ஆத்மாவாக இருக்கின்றன என வேதங்கள் கூறுகின்றன. அக்னியின் மூன்று புதல்வர்களுக்கு நாற்பத்தைந்து புதல்வர்கள் இருப்பதாகவும் இவர்களே பூமியை காக்கின்ற தேவர்களாகவும் இவர்களுடன் சேர்ந்து அக்கினி மற்றும் அவர்தம் மூன்று புதல்வர்களாக மொத்தமாக நாற்பத்தொன்பது பேர் பூமி பொறுப்பில் இருப்பதாக வேதங்கள் கூறுகின்றன. விஸ்வகர்மாவின் சாஸ்திரத்தில் அவர்களின் இடங்கள் எவை எவை என கூறப்பட்டுள்ளது.

தேவி பாகவதத்தின் எட்டாவது பாகத்தில் கூறப்பட்டது போல் எட்டு தேவர்களில் ஒருவரான அக்கினிக்கு மஹாமேரு மலையின் தென்கிழக்கை காக்கும் பொறுப்பு கொடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் அமர்ந்திருக்கும் மஹாமேரு மலையின் தென்கிழக்குப் பகுதிக்கு தேஜோவதி என்ற பெயரும் கொடுக்கப்பட்டுள்ளது. தேஜஸ் என்றால் பிரகாசிப்பது, ஞானம் உள்ளது என்ற பொருளும் உண்டு. இந்த தேஜோவதி அக்கினியின் தலைநகரமாகவும் விளங்குகின்றது.

அக்கி என்ற வார்த்தை சமஸ்கிருத வார்த்தையாகும். பல தேசங்களில் இந்த அக்னி என்ற வார்த்தை மருவியே காணப்படுகின்றது. உதாரணமாக லத்தீன் மொழியில் இக்னீஸ் என்றும் ஆங்கிலத்தில் இக்னைட் என்றும் நெருப்பின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது.

எட்டுதிசைகளில் அக்னிக்கு கொடுக்கப்பட்டுள்ளதைபோல் மஹாமேருமலையின் மத்தியில் உள்ள மனோவதி என்ற இடம் பிரம்மாவிற்கும் கிழக்கில் உள்ள அமராவதி என்ற இடம் இந்திரனுக்கும், தெற்கே சம்யமனி எமனுக்கும், தென்மேற்கு கிருஷ்ணன்கனி நிருதிக்கும், மேற்கே சிரத்தாவதி வருணனுக்கும், வடமேற்கு கந்தாவதி வாயுவிற்கும், வடகிழக்கு ஈசானார்க்கும் தலைநகரங்களாக மஹாமேரு மலையில் கொடுக்கப்பட்டுள்ளது என தேவிபாகவத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

செல்வன் பா.தக்ஷிகான்
தரம் 12T வர்த்தகப்பிரிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெய்வம்

வையகம் போற்றிடும் தெய்வமே
வரங்களை கேட்டு வேண்டினேன்
வழிகளை மறைத்தாயே
துணையாக நின்றாயே

காண நினைத்த பலவற்றை
காயங்களின்றி கண்டேனே
உனைகாணும் வரத்தை மட்டும்
ஏனோ இழந்தேனே

காட்சி தந்து
அருள் புரிவாய்
காலம் முழுதிலும்
கவலைகளை அளித்திடுவாய்

கைகளை கூப்பினேன்
கவலைகளை கூறினேன்
தரையினில் காட்சிதந்து - நான்
பெறாவரத்தை தருவாயே

செல்வன் A. வித்யாசாகர்
தரம் 12 T வர்த்தக பிரிவு

## பொன்மொழிகள்

* மனித மனதில் தோன்றும் நல்ல எண்ணங்களே இந்த உலகின் மிகச் சிறந்த வைரங்கள்
* நான் வாழ்வதற்காக என் பெற்றோர்களுக்கு கடமைப்பட்டுள்ளேன். ஆனால் நான் முறையாக வாழ்வதற்காக என் ஆசிரியருக்கு பெரிதும் கடமைப்பட்டுள்ளேன்
* நல்லவை எங்கே இருந்தாலும் ஒளிவிட்டுச் சுடரும், கெட்டவை இமயமலை உச்சியில் வைக்கப்பட்டு இருந்தாலும் இருள் கவிழ்ந்து மறைக்கப்படும்.
* ஒவ்வொரு நல்ல செயலும், நல்ல எண்ணமும் முகத்தில் ஒரு அழகை ஒளியைக் கொடுக்கிறது.
* அரிய சாதனைகள் வலிமையினால் விடாமுயற்சியினால்தான் சாதிக்கப்படுகின்றன

செல்வன்.D. தனுஷன்
தரம் 8 T

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாயே கலைவாணி !

அம்மா தாயே கலைவாணி
நீ என் நாவைக் காப்பாயே
இம்மா நிலத்தின் இனிமையெல்லாம்
இருக்குதுன் நாவின் அசைவினிலே

வெண்தாமரை மேல் வீற்றிருப்பாள்
வீணையைக் கையில் ஏற்றிருப்பாள்
வாணி சரஸ்வதி மாதாவே - எந்தன்
வாக்கினில் வந்து அருள்வாயே!

அம்மா அம்மா தாயே
அகிலாண்டேஸ்வரி நீயே
அன்ன பூர்ணேஷ்வரி தாயே
ஆதி பராசக்தி நீயே

செல்வன். மு. அமணன்
தரம் 12 T வர்த்தகப்பிரிவு

## சிந்தனை துளிகள்

(01) இலாபம் கிடைக்கின்றது என்பதற்காக நியாயத்திற்கு விரோதமாகப் போகக் கூடாது

(02) உங்களை ஒருவர் புகழ்ந்துபேசும்போது கவனமாக இருங்கள். திட்டும் போது அமைதியாக இருங்கள்

(03) தொடர்ந்து ஆசைகளுக்கு ஈடுகொடுப்பதைவிட முதலில் ஆசையை அடக்கிக் கொள்வது மேல்

(04) மற்றவர்களின் எதிர்பார்ப்புகளை கண்டு நீ ஒதுங்கி விடாதே

(05) அழகு பெண்ணுக்கு வறுமை தருகின்றது அடக்கம் அவர்களுக்கு அளவற்ற மதிப்பை தருகின்றது

(06) மனிதனின் கெட்டகுணங்களை வெறு ஆனால் அவனை வெறுக்காதே!

செல்வன். P. தனுஷன்
தரம் 13T விஞ்ஞானப் பிரிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக மக்களின் மாரியம்மன் வழிபாடு

அம்பிகை வழிபாடானது தமிழகத்திலே தொன்மையானதாக இருந்தாலும், கிழக்கே கண்ணகி அம்மன் வழிபாடு, உடப்பில் திரௌபதி அம்மன் வழிபாடு மற்றும் மலையகத்தில் மாரியம்மன் வழிபாடு என இலங்கையில் முத்திசையிலும் பரந்து காணப்படுகின்றது. பொதுவாக "மாரி" என்ற சொல்லுக்கு மழை எனவே பொருள் கூறப்படுகின்றது. அதனால் மழைக்காக மனு செய்யும் திருவிழாவாகவே அமைகிறது.

மலையகத்தில் வரட்சி ஏற்படும் வைகாசி, சித்திரை போன்ற மாதங்களில் ஒவ்வொரு தோட்டத்திலும் அல்லது கிராமத்திலும் மாரியம்மன் கோயில்களிலும் வெகு விமர்சையாக இத்திருவிழா கொண்டாடப்படும். இத்திருவிழாவின் அம்சங்களைப் பற்றி அறிந்து கொள்வது சிறந்ததாகும்.

## 1) பூப்போடுதல்

அம்மனிடம் மழை வேண்டி நிற்பவர்கள் சம்பிரதாய பூர்வமாக இவ்விழாவை ஆரம்பிக்க 15 நாட்களுக்கு முன்பு மாரியம்மனின் திருப்பாதக் கமலங்களை வாசனை மிக்க மலர்களைக் கொண்டு அலங்கரிப்பதையே பூப்போடுதல் என அழைப்பார்கள். இந்நாளில் இந்நிகழ்வு நள்ளிரவு வரை நடைபெறும். இவ்வழிபாடு இடம்பெறும் வேளையில் தப்பு, பறை, உறுமி, உடுக்கு போன்றவை இசைக்கப்பட்டு நம்மை பக்தியில் ஆழ வைக்கிறது.

## 2) காப்புக்கட்டல்

பூப்போடுதல் முடிந்த 15ம் நாள் அதிகாலை இந்நிகழ்வு நடைபெறும். இது ஒரு மஞ்சள் துண்டினை வெற்றிலையால் சுற்றி ஒரு காப்பை போல தேவியின் திருக்கரத்தில் கட்டப்படும். இத்தினத்தில் முகூர்த்தக்கால் ஊன்றுதல், மஞ்சள் பந்தர் இடுதல், கொடி மரமற்ற கோயில்களில் மூங்கிலால் கொடிமரம் நாட்டுதல் என்பன இடம்பெறும். இது இத் திருவிழாவின் தொடக்க நிகழ்வாகும். காப்புக்கட்டலுக்கு பிறகு பிரயாணம் செய்யும் கிராமத்தவர்கள் இரவு தங்காது தமது ஊருக்கே வந்தடைவதை வழக்கமாக கொண்டுள்ளனர்.

## 3) கரகம்பாளித்தல்

தேவியின் திருவுருவங்களான மாரி, காளி, சக்தி எனும் மூன்று மகா சக்திகளையும் வீதி உலா வர மூன்று சக்திகளையும் மூன்று கரகங்களாக அலங்கரிக்கப்படுகின்றன. இவை அனேகமாக அலரிப் பூக்களால் அலங்கரிக்கப்படும். காப்புக்கட்டல் விழாவன்று இரவில் ஆற்றங்கரை அல்லது ஏதாவதொரு நீர் நிலைக்குச் சென்று அடியார்கள் வெண்கலம் அல்லது வெள்ளியிலான இரண்டு செம்பும், மண்சட்டியொன்றுமாக மொத்தம் மூன்று கரகங்கள் அமைக்கப்பட்டு கரகம்பாளித்தல் நடைபெறும். கரகம்பாளித்தலானது தேவியின் சக்தியை எடுத்து இயம்புகின்றது. அதாவது 'மதிப்பு' அல்லது 'குறிப்பு' என்று மக்களால் நினைக்கப்படுவதை பூசாரி உடுக்குடன் இசைப்பார். அம்மன் பாடல்களினால் சாமியாடிகள் அருள் வரப்பெற்று சாமியாடி மதிப்பினை எடுத்து பின் அவர்கள் மூவரை தெரிந்தே கரகமாடிகள் தெரிவு செய்யப் படுகின்றனர். இது முதல் நாள் இரவு முழுவதும் நடைபெறும். பொதுவாக மாரியம்மனின் சக்தியை அறியவே இது செய்யப்படும். கரகமாடிகள் மஞ்சள் வேட்டியுடுத்து,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பிகையின் பிரம்பு, சாட்டை, சூலம் முதலியவற்றை தரித்து கரகமாடி கோயிலை வந்தடைவர். இவ்வேளையில் அம்மனின் கொலுவீற்றிக்கும் முகமாக அம்மன் பாடல்கள் பாடப்படும்.

4) **தீமிதிப்பும் காவடியும்**

இத்திருவிழா 3, 5, 7 நாட்கள் நடைபெறுவதால் காவடியும் தீமிதிப்பும் 2ம் அல்லது 3ம் நாள் இடம்பெறும். ஆயினும் தீமிதிப்பு, பறவைக்காவடி, பால்காவடி, வேலிக்காவடி, பன்னீர்க்காவடி என்பன கங்கைக் கரையில் பாளிக்கப்பட்டு ஆலயத்தை வந்தடைவது மகேஸ்வர பூசையுடன் முடிவடையும்.

5) **திரு உலா**

உலா வருகையானது 3ம் உள்வீதி வலமாகவும், 4ம் நாள் ஊர்வலமாகவும் வரப்படுகிறது. 3ம் நாள் உள்வீதி வலம் இரவில் நடைபெறும். திரு உலாவின் முக்கிய அம்சம் அம்மனின் ஊர்வலமாகும். இது நான்காம் நாளில் முத்துச்சிப்பி சப்பரத்தில் அம்மன் எழுந்தருளி வீடுதோறும் வந்து அருள்பாலித்தலாகும். இக்காலத்தில் வீடுகள் மாவிலை, வாழைமரம் போன்றவற்றால் அலங்கரிக்கப்படும்.

6) **மாவிளக்குப் பூசையும், தீர்த்தோற்சவமும்**

விழாவின் இறுதி நாளன்று மாவிளக்குப் பூசையும் தீர்த்தோற்சவமும் நடைபெறும். அரிசி மாவில் பன்னீர், தேன், பொட்டுக்கடலை, விபூதி போன்றவற்றை சேர்த்து பிசைந்து விளக்கைப்போல் அமைத்து விளக்கேற்றுவார்கள். இத்தினத்தில் அம்மனின் காளி, மாரி, சக்தி ஆகிய 3 கரகங்களும் ஊர்வலமாக ஆற்றங்கரை அல்லது நீர்நிலைக்கு எடுத்துச்செல்லப்பட்டு இறுதி நாளில் 'மஞ்சள் நீராடல்' எனும் தீர்த்தோற்சவம் நடைபெற்று முடிவடையும். அத்தோடு அம்மன் கங்கைக்கு சென்று தான் கொலுவில் இருந்து இறக்கப்படுகின்றாள். இதுவே 'குடிவிடல்' என்றும் அழைக்கப்படுகிறது. இத்துடன் கோயில் கதவு அடைக்கப்படுகிறது.

**எட்டாம் நாள் திருவிழா**

இது அடைத்த கதவை திறக்கும் முகமாக எடுக்கப்படும் விழாவாகும். எட்டு நாட்களும் அன்னையின் கொலுவிட்ட (குடிவிட்ட) கோவத்தினை தனிக்கவே கதவடைப்பு நடைபெறும். இந்த எட்டாம் நாளன்று மங்கள வாத்தியங்களை முழங்க மகா பூசை நடைபெறும். காளிக் கோயில்களில் சேவல் பழியிடல் மரபாக நடைபெறுகின்றது. இவ்வாறு 3, 5, 7 நாட்களாக நடைபெறும் இத்திருவிழா அனைத்து இன மக்களிடமும் புகழ்பெற்றுள்ளது. இதே போல ஒருசில மாற்றங்களுடன் கிழக்கிலங்கையில் கண்ணகியம்மன் திருவிழாவும், உடப்பில் திரௌபதியம்மன் திருவிழாவும் நடைபெறுகின்றன. தாய்மை வழிச் சமூகப்படைப்பின் உயர் சக்தியை இத்திருவிழா தெளிவுபடுத்துகிறது.

ஓம் சக்தி! பராசக்தி!

செல்வன். H. அர்ஜீன்
தரம் 11 E

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிழ்ச்சியாக வாழ வழி

இப்பூமியில் வாழ்கின்ற மனிதர்கள் அனைவரும் மாபெரும் இன்பத்தையும் மகிழ்ச்சியையுமே விரும்புகிறார்கள். ஆனால் இப்பூமியில் மகிழச்சியாக வாழ்பவர்கள் மிக மிகக்குறைவாகவே உள்ளனர், இதனால் பிறருக்கு மகிழ்ச்சி இன்பம் வேண்டி இறைவனைப் பிரார்த்திப்பவர்கள் எத்தனை பேர் என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. பிறர் மகிழ்ச்சியாக இல்லாதபோது, நாம் மட்டும் எவ்வாறு மகிழ்ச்சியாக இருக்க முடியும் என்பதைப் பலர் சிந்தித்துப் பார்பதில்லை, எல்லோரும் இன்புற்றிருப் பதனாலேயே நாமும் இன்புற்றிருக்கலாம் என்பது சைவம் காட்டும் உண்மை நிலையாகும், நாம் மகிழ்சியாக இருப்பதைப் பிறரும் மகிழ்ச்சியாக இருப்பதற்காகப் பிறரும் மகிச்சியாக இருக்க வேண்டும் என பிரார்திப்பதும் ஒரு வகையில் சுயநலம்தான். இருப்பினும் அது நன்மை பயக்கும் சுயநலம் என்பதால் பாதகமில்லை.

'இன்பமே சூழ்க, எல்லோரும் வாழ்க' என்பது சைவத்தின் குரலாக உள்ளது. சைவ மக்கள் இவற்றை உரக்கக் கூறிக் காற்றோடு காற்றாகக் கலக்கச் செய்து விடுவதோடு மாத்திரம் அமைந்து விடாது, வாழ்க்கையில் அவற்றைச் செயற்பாடுகளாகவும், மாற்றிவிடுதல் அவசியமாகும், கோட்பாடுகள் செயற்பாடாக மாறும் போதே பயன் கிடைக்கின்றது,

அந்தவகையில் மகிழ்ச்சியாக இருப்பதற்குச் சில விதிமுறைகளைப் பெரியோர்கள் கூறியுள்ளனர், அவற்றில் சிலவற்றை நோக்குவோம்.

* காலையிலும் மாலையிலும் சில நிமிட நேரம் ஓரிடத்தில் அமைதியாக இருந்து மனதை அலைவிடாமல் மௌனமாக அமர்ந்திருத்தல்
* மனதில் உறுதி, பேச்சில் இனிமை, செயலில் நன்மை என்பவற்றை வாழ்க்கையில் கடைபிடித்தல்
* பிறர் நலமாக வாழவேண்டும் என்பதில் விடாப்பிடியாக இருத்தல்
* உடன்பாட்டு சிந்தனைகளை மனதில் வளர்த்தல். எதிர்மறைச் சிந்தனைகளை அடியோடு களைத்தல்
* எல்லாம் நன்மைக்கே என்ற உணர்வினை வளர்த்தல்
* கடந்த காலத் துன்பங்களை, துயரங்களை அடிக்கடி மீட்டுப் பாராது இருத்தல்.
* எல்லோர் மீதும், எல்லா உயிர்கள் மீதும் அன்பும் கருணையும் காட்டுதல்.
* பொறாமை. ஆசை, கோபம், இன்னாச் செயல் ஆகியவற்றதைத் தவிர்த்தல்.
* போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து என்பதை ஏற்று வாழ்க்கையில் திருப்தி கொள்ளல்
* எல்லாம் நன்மைக்கே என்ற உணர்வோடு வாழ்தல்.

எனவே சைவநெறியில் நின்று வாழ்வதன் மூலம் நாமும் மகிழ்ச்சியாக இருக்கலாம். பிறரையும் மகிழ்ச்சியாக வாழ வழி செய்யலாம் என்பது உறுதி.

'எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல்
வேறொன்றியே பராபரமே'

செல்வன். கா. புஷ்பகாந்
தரம் 13T கலைப்பிரிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுள்

ஆகாயத்தை இரவு நேரத்தில் அண்ணாந்து பார்த்தால் அதிலே எண்ணில்லாத நட்சத்திரங்கள் மின்னுவதைக் காணலாம். தூரத்திலிருந்து பார்க்கும்போது அவை சிறியவைகளாகக் காணப்பட்டாலும் அளவில் மிகப் பெரியனவாகக் காணப்படுகின்றன. சூரியன் பூமியிலும் பார்க்க பதின் மூன்று மடங்குகளினால் பெரியதாகக் காணப்படுகின்றது. இதே போன்று இந்த வகையான பெருமையைக் கொண்டவர் கடவுள். இவர் அன்பையே வடிவமாகக் கொண்டிருக்கின்றார்.

'அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாருமறிகிலார்
அன்பே சிவமான தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே'

இதனால் அவர் நம்மிடம் கொண்ட அன்பு அளவில்லாததாகவே இருக்கும். பிள்ளையைப் பெற்ற தாயானவள் பிள்ளையிடத்தே மிகுந்த அன்பு கொண்டவளாக இருக்கின்றாள். அதேபோலத்தான் கடவுளும் எமக்கு அளவில்லாத அன்பை வாரி வழங்குகின்றார். தாயைக் காணும் பொழுது பிள்ளை எவ்வளவு ஆனந்தம் அடைகின்றது என எங்களால் உணர முடியும். தாயை விட பலமடங்கு அதிகமான அன்பினையுடைய கடவுளை நினைக்கும்போதும், அவரை கோயிலில் காணும் பொழுதும் நாமும் சந்தோஷமடைய வேண்டும். அது மட்டுமல்லாது எமது மனமும் அவரை நினைத்து கரைந்து உருகுதல் வேண்டும். என்றாவது ஒரு நாள் இந்த உயிர் நம்மை விட்டு நீங்குவது உறுதி. நமது சுற்றத்தார் உறவினர்கள் நண்பர்கள் எமது உடமைகள் அனைத்தும் எம்மை விட்டு நீங்கிவிடும். ஆதலால் கடவுள் ஒருவரே எக்காலத்திலும் எம்மை விட்டு நீங்காத உண்மைப் பொருள் என்று நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். ஆகவே நாம் எச்செயலை செய்யும் போது நமது மனம் கடவுளையே நாடி இருப்பின் நாம் செய்கின்ற செயல்கள் அனைத்துமே வெற்றியைத் தரும் என்பதில் ஐயமில்லை.

'இரவும் பகலும் துதிசெய் திருநாள்
பரவும் பரசே பரிசென் றருள்வாய்
கரவுண் டெழு சூர் களையைக கதிர்போல்
விரவுஞ் சுடர்வேல் விடுசேவகனை'

செல்வக் கு.கமலரூபன்
தரம் 13T கலைப் பிரிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் மஞ்சரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சக்தி வழிபாடு

எண்ணிய முடிதல் வேண்டும் நல்லவைவே எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும் தெளிந்த நல்லறிவு வேண்டும்
பண்ணிய பாவமெல்லாம் பரிதிமுன் பணியே போல்
நண்ணிய தின்முன் இங்கு நடந்திடல் வேண்டும் அன்னாய்
- மகாகவி பாரதியார்-

என அன்னையின் புகழை கூறியோர் பலர். இந்து நதிக்கரை நாகரிகத்திலும், சங்ககால தமிழ்நாட்டிலும் மிகப் பழமை வாய்ந்த வழிபாடாக தாய்த் தெய்வ வழிபாடே நிலவியது.

இவ்வுலகில் அனைவரும் அன்புடனும், அமைதியாகவும், ஆன்மிக சிந்தனையுடனும் வாழ்வதற்கும், மனிதன் மனிதனாகவும் மனிதாபிமானத்துடனும் வாழ வழிவகுப்பதும் இறை வழிபாடுகளே. இவ்வழிபாடுகளில் மிகவும் உயர்வானதும், புனிதமானதும் அம்பாள் வழிபாடாகும். அம்பாளே உலகின் சக்திக்கெல்லாம் ஊற்றாக விளங்குபவள். சூரியனின் ஒளியாகவும், சந்திரனின் குளிர்ச்சியாகவும், நீரின் தன்மையாகவும், தென்றலின் இனிமையாகவும் சக்தியானவள் விளங்குகின்றாள்.

'முக்கண்ணியை தொழுவார்க்கு ஒரு தீங்கில்லையே' என்கிறார் அபிராமிபட்டர். அதாவது கல்வி, செல்வம், வீரம் மூன்றையும் தருபவர் சக்தியே. அவரை தொழுவது சாலச் சிறந்தது என்கின்றார்.

சக்திக்குரிய வழிபாட்டில் மிகமுக்கியமானது நவராத்திரி விரதமாகும். சக்திக்குரிய பாடல்களைப் பாடுவதும், விரதம் அனுஷ்டிப்பதும் இந்துக்களின் கடமையாகும் எனவே நாமும் சக்திக்குரிய வழிபாட்டில் ஈடுபட்டு மூத்தி பேறை அடைவோமாக

'உலகத்து நாயகியே எங்கள் முத்துமாரியம்மா
உன்பாதம் சரண்புகுந்தோம் எங்கள் முத்துமாரியம்மா'

திருமதி யசோதா இராசையா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கீதக் கலை

ஆயகலைகள் அறுபத்து நான்கிலும் இசைக் கலையானது ஒரு முதன்மை பெற்ற கலையாகும். இன்று இந்த உலகில் இசைக்கலையானது கர்நாடக இசை, இந்துஸ்தான் இசை, மேலைத்தேய இசை என்ற மூன்று பெரும் இசைப்பிரிவுக்குள் உட்படுத்தியிருப்பதை எம்மால் காணமுடிகிறது. தென்னிந்திய இசையான கர்நாடக சங்கீதம் என்பது ஒரு தனித்த சாஸ்திரீய இசையாகும். உலகில் கார்நாடக இசையை இசைக்கடல் என்போம். இவ்வாறான சங்கீதம் தென்னிந்தியாவிலே வேர் ஊன்றி வளர்ந்ததாகும். இவ்விசை இன்று உலகில் பல இடங்களில் பரவி பரவசப்படுத்திக் கொண்டிருக்கின்றது.

கர்நாடக சங்கீதமானது சாஸ்திரீய தன்மையை கொண்டிருக்கின்றது. அத்தோடு பக்தி இசை, மெல்லிசை, சினிமா இசை என்ற புதிய இசை வடிவங்களும் உருவாக காரணமாக இருந்திருக்கின்றது.

மேலைத்தேய இசையானது தனக்கென்று சாஸ்திரீய தன்மையை கொண்டிருப்பினும் அவ் இசையில் இருந்து வெளிவந்த பொப்பிசை இன்று எல்லா இடங்களிலும் பரவலாக கையாளப்படுகின்றது. இந்த பொப்பிசையின் போது இலத்திரனியல் முறையைக் கையாண்டு தயாரிக்கப்பட்ட கருவிகளை கூடுதலாக கையாளுகின்றனர்.

இலங்கையின் ஆரம்ப காலக் கட்டத்தை எடுத்துக் கொள்ளும்போது இந்தியாவில் இருந்து பல இசை வித்துவான்களை இங்கு அழைத்து, கர்நாடக இசையை ரசிப்பதோடு மட்டுமல்லாது அவர்களைக் கொண்டு நிறுவன ரீதியாக கற்றல் தொடங்கியது. இந்தவகையிலே வட இலங்கை சங்கீத சபை, இராமநாதன் நுண்கலைப் பீடம், விபுலானந்த இசை நடனக் கல்லூரி, பெல்வுட் இசை - நடனக் கல்லூரி போன்ற நிறுவனங்களின் மூலம் இசை ஆசிரியர்கள் உருவாகி வருகின்றனர்.

பாடசாலைகளில் அழகியல் கல்வி ஊடாக இசை கற்பிக்கப் படுகின்றது. 1972 ம் ஆண்டில் இருந்து பாடசாலைகளில் இசை ஒரு பாடமாக கற்பிக்க ஆரம்பிக்கப்பட்டது.

எனவே சங்கீத கலையானது ஒரு உன்னத இடத்திலிருந்து முன்னேறி செல்கின்றது என்றால் அது மிகையாகாது.

"கலை இன்பமே நிலை இன்பம்"

திருமதி K. சந்திரகலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் இலக்கியங்களும் அறக்கருத்துக்களும்

இலக்கியம் என்பது ஒரு காலத்தின் நிலைக்கண்ணாடி என குறிப்பிடப்படுகின்றது. ஆம் நாம் நிலைக்கண்ணாடியின் முன் நிற்கும் போது அது எமது அங்க அசைவுகளையெல்லாம் அப்படியே காட்டுகிறதோ அதுபோலவே ஒரு சமுதாய மக்களின் வாழ்க்கை முறைகளை, அவர்களின் போக்கை, இலக்கை இலட்சியங்களை இலக்கியங்கள் அவ்வப்படியே படம் பிடித்துக்காட்டுகின்றன.

இலக்கியம் அது எழுந்த காலத்தின் சமூக வாழ்க்கையின் எல்லாப்பகுதிகளையும் முழுமையாகப் படம் பிடித்துக்காட்டவல்லது. இலக்கியம் பழமை தந்த ஒப்பற்ற கொடைகளுள் மிகச் சிறந்தது. பண்டைய காலம்முதல் (சங்ககாலம்) இக்காலம் வரை இலக்கியமானது மக்களின் வாழ்க்கை முறைகளையும் அதன் வளர்ச்சிக் கட்டங்களையும் பிரதிபலிப்பனவாகவே இருந்து வந்துள்ளமையை அவதானிக்கலாம்.

அது மட்டுமின்றி இலக்கிய சான்றுகளே ஒரு நாட்டின் ஒரு சமூகத்தின் பண்பாட்டு விழுமியங்களை பறைசாற்றுகின்றன. அவ்வகையில் தமிழ் இலக்கியங்களும் அவ்வவ் காலத்திற்குரிய சமூக, சமய, கலாசார, அரசியல் முதலியவற்றின் வரலாற்றை அறியத்தருவதுடன் மட்டுமல்லாது பல்வேறு அறக்கருத்துக்களையும் முன்வைத்துள்ளன எனலாம். அறிந்த கருத்துக்களையும் உணர்ந்த உணர்ச்சிகளையும் பிறருக்கு எடுத்துக் கூற உதவுகின்ற ஒரு கருவி மொழியாகும். அம்மொழியைப் பேசுகின்ற மக்களது கொள்கைகளையும் குறிக்கோள்களையும் எடுத்தியம்புவது இலக்கியமாகும்.

நாம் தமிழ் இலக்கிய வரலாற்றை எடுத்துக்கொண்டால் அவை பல்வேறு காலங்களாக வகுக்கப்பட்டு அவ்வவ்கால சமூக வாழ்க்கையின் பண்புகளை எடுத்துக் கூறுவனவாகவே அமைந்துள்ளன. தமிழ் இலக்கிய வரலாற்றை பொதுவாக சங்ககாலம், சங்கமருவிய காலம், பல்லவர்காலம், சோழர்காலம், நாயக்கர்காலம், ஐரோப்பியர்காலம், 20ம் நூற்றாண்டு என வகைப்படுத்தி ஆராயலாம். இவ் ஒவ்வொரு காலத்திலும் எழுந்த இலக்கியங்களில் அறக்கருத்துக்கள் இடம்பெற்றுள்ளதை அவதானிக்கலாம். 'நீதி நூல் பயில் எனும் பாரதியின் கூற்றுக்கேற்பவும், 'அறம், பொருள், இன்பம், வீடு அடைதலே நூற்பயன்' எனும் தண்டியலங்காரம் நூற்பாவில் குறிப்பிடப்பட்டுள்ளதிற்கு ஏற்பவும், எமது தமிழ் இலக்கியங்களின் குறிக்கோள் அறக்கருத்துக்களை கூறுவதாகவே இருந்துள்ளன எனலாம்.

பண்டைய இந்திய சிந்தைப் படி அறம், பொருள், இன்பம், வீடு என்பன நான்கு புருடார்த்தங்கள் எனக் கூறப்பட்டன. இந்நான்கு புருடார்த்தங்களை அடைய வழிகாட்டுவனவாகவே இலக்கியங்கள் எழுதப்பட்டுள்ளன எனலாம். பிற இந்திய மொழிகள் எல்லாவற்றையும் விட தமிழில்தான் அறநூல்கள் அதிகமாக உள்ளன என்பதை பு.ரு போப் போன்ற பிறநாட்டு அறிஞர்கள் கண்டறிந்து பாராட்டியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையில் தமிழ் இலக்கியம் முழுவதுமே அற இலக்கியம்தான் என்றால் மிகையாகாது. சங்க இலக்கியம், காப்பியங்கள், அறநூல்கள், சிற்றிலக்கியங்கள், புராணங்கள் என இலக்கியங்கள் பல பிரிவுகளை உள்ளடக்கியிருப்பினும் அவை யாவற்றினதும் அடிப்படை அறம் என்பதே ஆகும். ஆரிய மன்னன் பிரகத்தனுக்கு தமிழின் சிறப்பை பின்வருமாறு கபிலர் எடுத்துரைத்தார். அவரது குறிஞ்சிப்பாட்டில் கந்தர்வ மணம் பற்ற பின்வருமாறு குறிப்பிட்டப்பட்டுள்ளது. சமஸ்கிருத்தில் எண்வகை மணங்கள் கூறப்பட்டுள்ளன. அதில் யாழோர் மணமாகிய காந்தர்வத்தை ஒத்தது தமிழர்களின் களவு. ஆனால் சமஸ்கிருத மணமாகிய காந்தர்வத்தல் கற்பு வாழ்க்கைக்கும் திருமணத்திற்கும் முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை. ஆசையிருக்கும் வரை சிறான் கூடி இருந்து பிரிந்து விடலாம். அங்கே. ஆனால் தமிழரின் களவு மணமோ முறைப்படி கற்பாகிய திருமண வாழ்கையில் நிறைவெய்த வேண்டும் என்கிறார் கபிலர். எனவே சங்க இலக்கியங்களும் அறம் உணர்த்துவதாகவே அமைந்திருந்தன.

சங்கமருவிய கால நூல்கள் முழுக்க முழுக்க அறநூல்களே எனலாம். சங்கமருவிய கால நூல்கள் பதிணெண் கீழ்கணக்கு நூல்கள் எனப்படுகின்றன. இவற்றுள் 11 நூல்கள் அறநூல்கள் ஆகும். இவை நாலடியார், நான்மணிக்கடிகை, இன்னாநாற்பது, இனியவை நாற்பது திருக்குறள், திரிகடுகம், ஆசாரக்கோவை, பழமொழி 400, சிறுபஞ்சமூலம், முது மொழிக்காஞ்சி, ஏலாதி என்பனவாகும். இவற்றுள் அறம், பொருள், இன்பம் என்ற முப்பொருளையும் கூறுவன திருக்குறளும், நாலடியாரும் மட்டுமே. எனவே இவை பழங்காலம் முதலே பெரிதும் போற்றப்பட்டு வருகின்றன. எனவே் ஆலும் வேலும் பல்லுக்குறுதி நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி எனும் பழமொழி தோற்றம் பெற்றதெனலாம். ஈரடி கொண்டது திருக்குறள், நாலடி கொண்டது நாலடியார்.

திருக்குறள் 133 அதிகாரங்களையும் 1330 குறட்பாக்களையும் கொண்டது. மூன்று பால்கள் கூறப்பட்டுள்ளன. அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் என்பனவே அவை. அறத்துப்பாலில் 380 குறள்களும், பொருட்பாலில் 700 குறள்களும் காமத்துப்பாலில் 250 குறள்களும் காணப்படுகின்றன. அனைத்திலும் அறக்கருத்துக்களே கூறப்பட்டுள்ளன எனலாம். அறத்துப்பாலிலும், பொருட்பாலிலும் உள்ள பல அதிகாரங்கள் பல்வேறு அறக்கருத்துக்களை எமக்கு கூறுவனவாக உள்ளன. உதாரணமாக அறத்துப்பாலில் நடுவு நிலைமை எனும் அதிகாரத்தில்,

'கேடும் பெருக்கமும் இல்லல்ல நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க்கனி'

எனும் குறளில் கேடும் வாழ்க்கையும் வாழ்க்கையில் இல்லாதவை அல்ல ஆகையால் நெஞ்சில் நடுவு நிலைமை தவறாது இருத்தலே சான்றோர்களுக்கு எனக் கூறப்பட்டுள்ளது. மேலும் ஒழுக்கமுடைமை எனும் அதிகாரத்தில் 'ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்' எனும் முதற் குறளே ஒழுக்கத்தின் சிறப்பைக் கூறுகின்றது. அவ்வதிகாரத்திலுள்ள ஒவ்வொரு குறளும் ஒழுக்கம் பேண வேண்டியதன் அவசியம் அதன் பயன், ஒழுக்கம் தவறின் ஏற்படும் விளைவு என்பன கூறப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னா செய்யாமை எனும் அதிகாரத்தினூடாக பல்வேறு அறக்கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன.

'பிறர்க்கு இன்னா முற்பகல் செய்யின் தமக்கு இன்னா
பிற்பகல் தாமே வரும்'

எனும் குறளில் முற்பகலில் மற்றவர்களுக்குத் துன்பமானவற்றை செய்தால் அவ்வாறு செய்வர்க்கே பிற்பகலில் துன்பங்கள் தானாகவே வந்து சேரும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இது 'முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்' எனும் பழமொழிக்கு ஒப்பான அறக்கருத்தாகும். திருக்குறளில் ஒவ்வொரு அதிகாரமும் ஒவ்வொரு வகையில் அறக்கருத்துக்களை முன்வைப்பதாகவே உள்ளன. கொல்லாமை, நிலையாமை, அறன்வலியுறுத்தல் இல்வாழ்க்கை, வாழ்க்கைத் துணைநலம், மக்கட்பெறு அன்புடைமை, விருந்தோம்பல், இனியவை கூறல், செய்நன்றி அறிதல் ஏனம் அதிகாரங்களில் மக்கள் வாழ்க்கைக்குத் தேவையான பல்வேறு அறக்கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன. மேலும் பொருட்பாலில் இறைமாட்சி, எனும் அதிகாரத்தில் ஓர் அரசனுக்குரிய அறங்கள் கூறப்பட்டுள்ளன. அமைச்சு எனும் அதிகாரத்தில் ஓர் அமைச்சனுக்குரிய அறங்களும் கூறப்பட்டுள்ளன. எனவே திருக்குறள் ஓர் அறக்களஞ்சியம் என்றால் மிகையாகாது.

அது போலதான் நாலடியாரிலும் பல சிறப்பான அறக்கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. சமண முனிவர் பலர் இயற்றிய 400 வெண்பாக்களில் ஆனது இந்நூல்.நிலையாமை பற்றியே இதில் அதிகம் பேசப்பட்டுள்ளன எனினும் மேன்மக்கள் இயல்பு, காமத்தீயின் கொடுமை, கல்வி அழகு, விண்ணுலக இன்பம் போன்ற அறக்கருத்துக்கள் அழகாக கூறப்பட்டுள்ளன.

சங்கமருவிய காலத்திற்கு பிற்பட்ட கால நூல்களுள் ஔவையாரின் நீதி நூல்கள் பல்வேறு அறக்கருத்துக்களை எமக்கு எடுத்துரைக்கின்றன எனலாம்.

ஔவையாரின் ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி போன்ற நூல்களில் பல்வேறு அற நீதிக்கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளதுடன் எனலாம். இவரது நூல்களில் தமிழில் இலகுவான நடையில் கருத்துக்கள் முன்வைக்கப் பட்டுள்ளதுடன். சிறுவர்கள் இலகுவாக புரிந்து கொள்ளக் கூடிய மொழிநடையில் கருத்துக்கள் அமைந்துள்ளன. ஆத்திச் சூடியில் அறம் செய்ய விரும்பு, ஆறுவது சினம், இயல்வது தரவேல் என அகர வரிசையில் ஓரடிச் செய்யுளில் அறக் கருத்துக்களை முன்வைக்கின்றார்.

கொன்றை வேந்தனிலும் மக்கள் சாதாரணமாக கடைபிடிக்க வேண்டிய நீதிக்கருத்துக்கள் இலகுவான மொழிநடையில் ஓரடிச் செய்யுள்களாகவே காணப்படுகின்றன. 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்','ஆலயம் தொழுவது சாலவும் நன்று', 'இல்லறம் அல்லது நல்அறம் அன்று' என்பன போன்ற வரிகளின் மூலம் பல அரிய கருத்துக்கள் கூறப்பட்டுள்ளமையை அவதானிக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூதுரையின் கடவுள் வாழ்த்துடன் தொடங்கும் நாலடி செய்யுள்கள் காணப்படுகின்றன. நன்றி அறிதல், மேலோர் இயல்பு, மங்கையரின் சிறப்பு, உபகாரத்தின் பயன் போன்ற பல அரிய கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன. உதாரணமாக நல்லார் இயல்பினையும் தீயார் இயல்பினையும் கூறும் பாடல்களை அவதானிப்பின் இவரது கருத்துக்களின் ஆழம் புரியும்.

'நல்லாரைக் காண்பதும் நன்றே நலமிக்க
நல்லார் சொல் கேட்பதுவும் நன்றே - நல்லார்
குணங்களை உரைப்பதுவும் நன்றே அவரோடு
இணங்கி இருப்பதுவும் நன்றே'

இங்கு நல்ல குணம் உள்ளவரைக் காண்பது அவர். கூறும் வழிகளைக் கேட்பது, அவர் பண்புகளை எடுத்துச் சொல்வது அத்தகையவரோடு இணைந்து இருப்பது எவ்வாமே நன்மை தருவதாகவும்

'தீயாரைக் காண்பதுவும் தீதே'

எனும் பாடலில் தீயவரைக் காண்பது அவரது பயனற்ற மொழிக் கேட்பது அவரது கெட்டக் குணங்களைப் பேசுவது அவர்களுடன் சேர்வது யாவுமே தீமையை பயக்கும் எனவும் மிக அழகாக கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

நல்வழியிலும் சாதி, நிலையாமை, புண்ணிய பாவ பலன்கள், மாண்டார் இயல்பு என்பன போன்ற பல்வேறு கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன.

உதாரணமாக

'மானம், குலம், கல்வி, வாண்மை அறிவுடைமை
தானம், தவம் உயர்ச்சி தாளாண்மை - தேனின்
கசி வந்த சொல்லியர் மேல் காமுறுதல் பத்தும்
பசி வந்தால் பறந்து போகும்'

எனும் பாடலில் பசிவந்தால் மேற்கூறிய 10ம் பறந்திடும் என அழகாக கூறியுள்ளார் ஔவையார். எனவே ஔவையாரின் நூல்கள் யாவுமே நீதி நூல்களே.

எமது தமிழ்க் காப்பியங்களும் அறக்கருத்துக்களை கூறுவனவாகவே அமைந்துள்ளன. இளங்கோ அடிகளின் சிலப்பதிகாரம் மூலம் பல அறக்கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. அரசியலில் தவறு செய்தவர்களுக்கு அறமே கூற்றாகும், கற்பில் சிறந்த பெண்களை இவ்வுலகமே போற்றி வணங்கும், ஊழ்வினை தவறாது தனது பலனை கொடுக்கும் எனும் அறக்கருத்துக்களை உணர்த்துவது சிலப்பதிகாரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறம் வெல்லும் பாவம் செய்தோர் தோற்றுப் போவர் எனும் அடிப்படை கருத்தினை உடையது கம்பர் எழுதிய கம்பராமாயணம். மகாபாரதமும் இவ்வாறே அறமே வெல்லும் மறம் தோற்கும் என கூற எழுந்த காவியமாகும்.

மேலும் பிற்பட்ட காலத்தில் அதாவது 16ம் நூற்றாண்டில் வாழ்ந்த அதிவீரராம பாண்டியரால் எழுதப்பட்ட வெற்றிவேற்கை எனும் நூலில் 82 ஓரடி அறிவுரைகள் காணப்படுகின்றன. இதனால் இதற்கு நறுந்தொகை எனவும் பெயருண்டு இதில் 'எழுத்தறிவித்தவன் இறைவன் ஆகும்','கல்விக்கழகு கசடற மொழிதல்','அறிஞருக்கு அழகு கற்றுணர்ந்து அடங்கல்' போன்ற நல்ல அறிவுரைகள் காணப்படுகின்றன சில ஈரடிகளிலும் அமைந்துள்ளன.

உதாரணம்

'எக்குடி பிறப்பினும் யாவரே ஆயினும்
அக்குடியிலே கற்றோரை மேல்வருக என்பர்'

இது தவிர பிற்காலப் புலவரான உலகநாத பண்டிதர் இயற்றிய உலக நீதியும், 13 விருத்தப்பாக்களில் வேண்டாம் எனும் எதிர்மறையாக அறிவுரைக்கூறும் நூலாகும். இதில் 'ஓதாமல் ஒருநாளும் இருக்கவேண்டாம''ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்''மாதவை ஒருநாளும் மறக்கவேண்டாம்.''வஞ்சனைகள் செய்வரோடு இணங்க வேண்டாம''போகாத இடந்தனிலே போகவேண்டாம்''மோகவிட்டு புறம் சொல்லி திரிய வேண்டாம்' எனும் வரிகள் மூலம் இலகுவாக எல்லோரும் அறிய கூடிய அறக்கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

மகாகவி பாரதியாரின் பாடல்களிலும் அறக்கருத்துக்களை நாம் காணலாம். ஓடி விளையாடு பாப்பா எனும் பாப்பா பாட்டிலேயே அவர் மிக அழகாக சிறுவர்களுக்கான அறக்கருத்துக்களை பாடிச் சென்றுள்ளார்.

இதுதவிர இன்னும் எத்தனையோ இலக்கியங்களில் பல அறக்கருத்துக்கள் கூறப்பட்டிருப்பினும் அவை அனைத்தையும் இங்கு கூற இயலாது சைவசமய இலக்கியங்களான சித்தர்பாடல்கள் திருமூலரின் திருமந்திரம், தாயுமானவர், குமரகுருபரர், வள்ளலார் போன்ற கவிஞர்களின் பாடல்கள் என்பவற்றிலும் அறக்கருத்துக்கள் நிறைந்துள்ளன. எனவே தான் முன்பு தமிழ் இலக்கியம் முழுவதுமே அறக்கருத்துக்கள் நிறைந்தவை எனக்கூறப்பட்டது. எனவே தமிழர்களாகிய நாம் இலக்கியம் படித்தலை மறந்துள்ள இக்காலக்கட்டத்தில் எமது இளைய தலைமுறையினர்க்காவது இவற்றின் சிறப்பினை கூறி தமிழ் இலக்கியத்தை போற்றி வளர்ப்போமாக.

திருமதி உமாமகேஸ்வரி சந்திரசேகரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரஸ்வதியை சரணடையுங்கள்

மனிதனுடைய வாழ்க்கை என்பது ஏதோ வகையில் இறைவனோடு ஒன்றி யுள்ளதைக் காணலாம். மனிதன் எம்மதத்தைச் சார்ந்திருந்தாலும் அவனை இயக்கும் சக்தி கடவுள் என்றே அனைவரும் கூறுகின்றனர்.

எந்த மனிதனும் அவனாக வாழ்வதில்லை ஏன்? அவனை அறியாமலேயே அவனுள் தீய சக்திகள் புகுந்து அவனை ஆட்டிப்படைக்கின்றன. இந்தத் தீய சக்திகள் எவை? அவனை என்ன செய்யும், இந்தச் தீய சக்திகளிலே முதலா வதாகக் குறிப்பிடப்படுவது சாம்பன் எனும் தீய சக்தியாகும் இச் சக்தி உலகெல்லாம் வியாபித்திருக்கிறது. அறிவாளிகளுக்குள்ளேயும் வாய்பிருந்தால் இச்சக்தி புகுந்துவிடும் தன்மையுடையது. எடுத்துக்காட்டாக நாம் ஒரு நேர்முகப் பரீட்சைக்கும் போவதற்குச் தயாராகிறோம் என்று வைத்துக் கொள்வோம். பார்த்துப் பார்த்து அணைத்து ஆவணங்களையும் எடுத்துக் வைத்துக் கொள்வோம்.

ஆனால் நேர்முகப் பரீட்சை மண்டபத்திற்குப் போன பிறகு தான் தெரியும் ஏதோ ஒரு முக்கியமான ஆவணத்தை பார்த்தோமோ அதை அப்படியே மேசையில் வைத்துவிட்டு, எடுக்காமல் வந்துவிட்டேனே என்போம். இது நாம் தெரிந்தே செய்வதல்ல. நம்முன் ஒரு மடமையானது புகுந்து கொள்கிறது. இதை எப்படிப் போக்க வேண்டும். எனவே கலைமகளைத் தியானிப்போம்.

முக்கியமான வேலைக்குத் தயாராகும் போது ஒன்பது முறை "ஓம் ஸ்ரீ மஹா சரஸ்வதி சரணம்" என்று ஜபித்துவிட்டு தொடங்குங்கள். சில குழந்தைகளுக்கு இந்தப் பிரச்சனை அதிகமாகவே இருக்கும். என் குழந்தை எல்லா விஷயத்திலும் கெட்டிக்காரன். ஆனால் இந்தப் படிப்பு விஷயம் மட்டும் வரவே வராது. புத்தகமே தொடமாட்டான் என பலர் புலம்புவதைக் கேட்டிருக்கி றோம், இதற்குக் காரணம் யார்? இந்த தீய சக்தியான சம்பனே தான். இத்தீய சக்தியினால் பீடிக்கப்பட்டவர்கள் சில சமயங்களில் இப்படித்தான் இருப்பார்கள்.

இதற்கு ஒரே வழி "ஓம் ஸ்ரீ மஹாசரணம்' எந்த சரணத்தைச் சொல்லி தினமும் காலையிலும் மாலையிலும் சரஸ்வதிக்கு ஒன்பது வேளை மலர்களைக் கொண்டு பூஜியுங்கள். இத் தீய சக்தி விரட்டப்பட்டிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த தீய சக்தி விசும்பன் என்று கூறப்படுகிறது. சோம்பேறித்தனத்தை இத்தீய சக்தி உருவாக்கிறது. சிலரை அவதானித்து பாருங்கள். உணவு உண்ணுவார்கள் தூங்குவார்கள். எப்பொழுதெல்லாம் நேரம் கிடைக்கிறதோ அப்போதெல் லாம் தூங்கிக் கொண்டே இருப்பார்கள். இது மட்டுமே நோக்கமாக இருக்கும். 'ஓம் ஸ்ரீ மஹா சரஸ்வதி சரணம்' என்ற சரணத்தை 18 முறை சொல்லி வழிபட, அவனிடமிருக்கும் விசும்பன் என்ற தீய சக்தி தொலைத்து விடும். அடுத்த தீய சக்தி தூமரலோசன் எனும் தீய சக்தியாகும். நம்முள் பலர் இந்தத் தீய சக்தியினால் பீடிக்கப்பட்டவர்களே. அதாவது விதண்டாவாதப் பேர் வழிகள். அவர்கள் பேசினால் அவர்களுக்கே கேடு வருமென்று, அவர்களுக்கே தென்படாது. அதில் குறை கண்டுபிடித்து நக்கலடிப்பார்கள். வெறும் வாய்ப்பேச்சுப் பேர்வழிகள். அவர்கள் பேசினால் அவர்களுக்கே கேடு வருமென்று அவர்களுக்கே தெரியாது. எந்த இடத்துக்குப் போனாலும் ஏதாவது ஏடாகூடமாகப் பேசி வம்புக் கிழுத்து, கெட்டபேர் வாங்கிவிடுவார்கள். இந்த தீய சக்தியை விரட்ட தினசரி 108 முறை 'ஸ்ரீ மகா சரஸ்வதி சரணம்'' என்ற சரணத்தை மனப்பூர்வமாக சொல்ல வேண்டும். இவ்வாறு, செய்தால் இவர்கள் எல்லோரும் விரும்பும் படியாகவும் புகழும்படியாகவும் வாழ்வார்கள்.

அடுத்த தீய சக்தி இரத்த பீஜன் எனும் தீய சக்தியாகும். இது மிகக் கொடூரமான தீய சக்தியாகும். சரஸ்வதியின் இராஜ்ஜியமே இந்த இரத்த பீஜனை ஒழிப்பதற்காகத்தான் வந்துள்ளது. இது இரத்த வெறி பிடித்த தீய சக்தி. இத் தீய சக்தியால் பீடிக்கப்பட்டுள்ளதனால் வெறுமனமே பேசமுடியாது. இரண்டாவது பேச்சிலே கையை ஓங்கிவிடுவார்கள். கூலிக்கு கொலை செய்பவர்கள், தீவிரவாதிகள், போன்றோர் இத் தீயசக்தியால் பீடிக்கபட்பட்டவர்களே. இத் தீயசக்தியை விரட்டுவதற்கு எல்லா மக்களும் சரஸ்வதி தேவியை வணங்க வேண்டும் அதன் மூலம் சரஸ்வதி அதி அற்புத ஆற்றல் பெற்று யாழினை மீட்டுவாள் பலநூறு ஆண்டுகளுக்கு இந்த இரத்த பீஜனை மயக்கத்தில் கிடத்துவாள். மக்கள் இரத்த வெறியிலிருந்து மீள்வார்கள். நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டிய முக்கிய விடயம் தீய சக்திகளை அழிக்க முடியாது. அடக்கத்தான் முடியும் என்பது தான்.

கல்வியிலும் மாணவ மாணவிகள் தினசரி 9 முறையும், உத்தியோகத்தில் இருப்பவர்கள் தினசரி 18 முறையும் முக்கிய பொறுப்பிலிருந்து சாதனை படைத்தவர்கள் தினசரி 108 முறையும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஓம் ஸ்ரீ மஹாசரஸ்வதி சரணம்'

என்ற நாமத்தை கூற அறிவு, பக்தி கூர்மை, பொன், பொருள் சேர்க்கை பெற்று வளமோடு வாழ்வர் என சரஸ்வதி கட்டளை கூறகின்றது. உலகிற்கு அமைதியையும் சுபீட்சத்தையும் தருபவள் சரஸ்வதியே என்பதை பூரணமாக நம்புங்கள். ஒவ்வொரு இல்லத்திலும் சரஸ்வதியின் படத்தை வைத்து தினசரி வணங்குங்கள். குழந்தை பிறந்தது முதலிருந்தே சரஸ்வதி பூசையை சிறப்பான கொண்டாடுங்கள்.

## சரஸ்வதி மணிமாலை

அம்பேதி சததம் பக்த்யா யோ வா
ப்ருதேியா பராம்
தஸ்மை யச்சதி யா சாந்திம் பராம்மேதாம்
ததாதுமே!

'தாயே.................. என்று உன்னை மனப்பூர்வமாக அழைப்பவன் மனநிம்மதி அடைகிறான், சந்தோஷம் அடைகிறான், எனக்கு மனம் நிம்மதியையும், சந்தோஷத்தையும் தருவாயாக.' என தினசரி வணங்குங்கள்.

திருமதி. கமலினி கங்காதரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவன்

'தூய்மையான இடங்களில் மட்டுமே இறைவன் உறைவான்'

மனிதர்கள் வாழ்வில் அனைத்து அம்சங்களிலும் இறைவன் குடிக்கொண்டிருக்கின்றார், நாம் காலையில் எழுவதிலிருந்து நித்திரைக்கு செல்லும் வரை இறை சிந்தனையுடனேயே செயற்படுகின்றோம், காலையில் நித்திரை விட்டெழும் போது 'சிவசிவ' என்று சொல்லிக் கொண்டே எழுகின்றோம். இதுவே ஒவ்வொரு நாள் தொடக்கத்திலும் நாம் ஆற்றும் முதல் இறை வணக்கமாகும். பின்னர் சூர்ய நமஸ்காரம் செய்தல்.

இறைவன் மூவகை திருமேனிகளுடன் உயிர்களுக்கு அருளும் பொருட்டு இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானசக்தி, என்ற மூன்று ஆற்றல்களளோடு கூடி நிற்பான். திருவருளை திருமேனியாக கொள்வான், அப்பொழுது அருவம், உருவம், அருவுருவம் எனும் மூன்று திருமேனிகளைக் கொள்வான்.

பதிப்பொருள் அருவம், உருவம், அருவுருவம் என்ற மூன்று தன்மையும் இல்லாதது ஆயினும் உயிர்களுக்கு அருள் செய்யும் பொருட்டு அருவாகியும், உருவாகியும் அருவுருவாகியும் தான் நினைத்த வண்ணம் தோற்றம் கொள்ளும் வல்லமை உடையவன் இறைவன்.

எனவே இந்து சமயத்தவர்களாகிய நாம் இறைவனின் சிந்தனையுடன் இருந்து நல்ல இறைபக்தியுள்ளவர்களாக வாழ்க்கையில் சௌபாக்கியங்களுடன் வாழ இறைவன் வழிபடுவோம்.

திருமதி K விஜயபாரதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடவுளையே கடன் கொடுத்துவிட்டு

நானாகிய இளைஞர்களே
விழித்தெழுங்கள்
காலம் செய்கின்ற
கோலத்தில் வாழ்க்கை
மாறி வருகின்றது

சொந்த மதத்தையே
சுதந்திரமாய
வழிபட
வழியில்லை

கடவுளையே
கடன் கொடுத்து விட்டுக்
கண்ணீர்
வடிக்கின்றோம்

நல்ல மரத்தை
தாக்கும்
புல்லுருவியை
அழிப்பதைப் போல

என் அறிவு மிகையால்
எம் மதம்
அழியாமல்
காத்திடுவோம் !


திருமதி. K தியாகராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments from*

ASIAN PAINTS
PRIVILEGE CLUB

# SRI HARAN HARDWARE



No. 182, COLOMBO STREET,
KANDY.

081-2223752
Email :kiruba1822@yahoo.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments from*

# PERERA POWER

**Industrial Electrical**
**Heavy Duty Motor Winding**
**High voltage & low voltage control panels**
**Generator installations**
**solar power assembling**
**boiler installations**
**Iron works - Industrial Fiber Gating Etc.**
**Aluminum Fittings - colour cords supplies**
**Brand new Tyre suppliers & Tyre changing**
**Spray paint booth**

*176/1, UDAERIYAGAMA*
*PERADENIYA*
*HOTLINE : 072 2175923 / 077 6447225*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


*With Best Compliments from*

# UNI WHEEL

**Stockist P.V.C fittings &**
**Sanitaryware**
**Specialist in P.V.C Fabrication**

**No. 157 A,**
**Willliam Gopalawa Mw,**
**Kandy**

**Tel 081-2203276**
**0777-844621**
**077-3240432**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments from*

# THE INTERNATIONAL HARDWARE STORES

**T.KANAGARAJA**
**0777 813177**

asianpaints

**AUTHORIZED DEALERS FOR ASIAN PAINTS & ROBBIALAC, WATER METERS, S-LON PIPES, FITTINGS AND HARDWARE ITEMS**

**60, D.S.SENANAYAKE VEEDIYA - KANDY**
**TEL : 081-2222220 FAX: 081- 2223432**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments from*

# NEW LEE MEDICAL

**Wholesale and Retail, Druggists**
**Chemists & Groceries**
**# 100, Dalada Veediya**
**Kandy**
**Tel : 081- 2229168**
**Office Tel / Fax : 081 -2220688**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments from*

# NEW PRIYA STORES

**Your one stop Grocery Store**


**Dealers in Groceries, Imported Products & Hotel Supplies**

**125C, D.S.Senanayake Veediya, Kandy**

**(Kandy City Mission Building)**

**Tel : 081-2223979 Fax: 2223551**

**e-mial :newpriyastores@yahoo.com**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments from*

# KANDY CITY HARDWARE

Dealers in Hardware Electrical goods, P.V.C Pipes
Auto paints, Paints, Fittings & Interlock etc




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments from*

# CITY TEX

WHOLESALE & RETAIL DEALERS IN
TEXTILES & TAILORING ITEMS
56 KOTUGODELLA VEEDIYA
KANDY - SRI LANKA
TEL 081 2238833
081 2223323
FAX 081 2200866




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments from*

# BALAJI OCEAN VIEW


Hotel & Indian Restaurant



Main Street, Ulla, Aarugambay
Sri Lanka

# BALAJI DOSA

mobile : +94-7 5535 5144
Tel : 063 4 930 390 | 063 2 248 747
E-mail- director@balajioceanview.com
www.balajioceanview.com
(A subsidiary of Balaji Group of Companies Pvt. Ltd)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments from*

# PRS Comm

**94/ Nawalapitiya Road,**
**Ginigathena**

**0777-167432**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments from*


# ROYAL FOODS

**PANWILA**
**No 102, Main Street**
**Panwila**
**072- 5101267**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments from*



# MADHAVAN'S

Spicy Foods

Go to call spice

217, Peradeniya Road, Kandy

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments from*

Mr. Mani

# LEMURIA

## RESTURANT & ROOMS



**No. 252, Peradeniya Road**
**Kandy**
**Tel : 075 2506466**
**071 3483556**
**075 2506406**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments from*

**S.Sasi**
**Chairman / Managing Director**
**+94 777 813 037**

**S.Arun**
**Sales &Marketing**
**+94 779 318 715**



# SHA BAG INDUSTRIES

Dealers in all variety of bags

10, New Town, Digana
Rajawella.
Office – 081-2376590


# 17B. Kotugodella Veediya.
Kandy.
Tel: 081-2225280

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments from*

# P. Sasi Pineapple shop
# &
# Fruit supplier

**No 224, Central Market**
**Kandy**
**Tel: 0779 113 539**
**0774 289 439**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments from*


# THILANI TRADERS

**General Merchants**


**No 225,Central Market,Kandy**

**Tel: 072 7841746**

**075 0105720**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments from*

புனித சில்வெஸ்டர் கல்லூரியின் வாணி விழா
சிறக்க வாழ்த்துகின்றோம்.

திரு.திருமதி. K. தங்கையா குடும்பத்தினர்
10 ஆம் கட்டை
தெல்தெனிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments from*

**புனித சில்வெஸ்டர் கல்லூரி மாணவர்களுக்கு கலைமகளின் அருள் பரிபூரணமாக கிடைக்க வாழ்த்துகின்றோம்.**

திரு. T. கோபிநாத்
திருமதி. சிந்துஜா கோபிநாத்
செல்வன். விவியன் விஷ்ரேஷ்
45, கல்கந்த லேன்
அனிவத்த, கண்டி.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments from*



# FRESH CHICKEN
# (Irfan)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments from*

# VALAMPURI

No 56, New town, Digana,
Rajawella.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments from*


**S.Devananth**
**Proprietor**

# DDR PHARMACY


**Ddr Distributor's**
**#88/7, Mapanawathura Passage,**
**Kandy.**

**#38, Central Market,Kandy.**

**Tel : 081 2232324**
**Mob : 075 5326992**
**Email : ddr_pharmacy@yahoo.com**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments from*




*With Best Compliments from*

# U.D .ELECTRO GOLD PLETORS



Gold & Silver Plating, Dull Gold Plating,

Kandyan Bridal Sets for Rent and Sale

No. 60/ 1/1 Yatinuwara Patu Mawatha, Kandy

Tel: 072-9927131

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

*With Best Compliments from*

K.Kanagarathinam (Kanagu)
Managing Partner

# SRI GANESHAHINI

## ஸ்ரீ கணேஷாஹினி

மலர் விற்பனை நிலையம்

No. 102/20 MATALE ROAD
(Behind Sri Selva Vinayagar Thirukovil)
Rattota

Tel: 0777946925
0772946925
0662255475
E.mail: ganeshayinik@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து மன்ற ஆசிரியர் குழாம் - 2017



முன்வரிசை - இடமிருந்து வலமாக
திரு. S. சிவனேசன், திருமதி. Y. இராசையா, திருமதி. K. செந்தினி, திருமதி. U. சந்திரசேகரன், திரு. A .ராஜா ரஞ்ஜிற் (பிரதி அதிபர்), திரு. T. R. S. மீட்டியாகொட (அதிபர்), திரு. N. கிஷோகுமார், திரு. K. ஜெகனாதன், திரு. K. ஆனந்தவேல்.

பின்வரிசை - இடமிருந்து வலமாக
திருமதி. K. சுமதி, திருமதி. S. சரோஜினி, திருமதி. M. சிசில்குமாரி, திருமதி.G.. பரிமளா, திருமதி. U . இராமனாதன், திருமதி. K.P. தர்சினி, திருமதி. M. பாலச்சந்திரன், திருமதி. D. விஜயபாரதி, திருமதி. J. திருச்செல்வம், திருமதி. K. கங்காதரன், திருமதி. S. சுமதி, திருமதி. L. விஜயகுமாரன், திருமதி. S. கஜந்தினி, திருமதி. K. சுமதி, திருமதி. K. சந்திரகலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து மன்ற நிர்வாக குழாம்




முன்வரிசை - இடமிருந்து வலமாக
திருமதி. Y. இராசையா, திருமதி. K. செந்தினி, திருமதி. U. சந்திரசேகரன், திரு. A .ராஜா ரஞ்ஜிற் (பிரதி அதிபர்), V. நிலுக்ஷன், M. சுஜித், K. ஸ்ரீ ஹரிபிரசாத்,

பின்வரிசை - இடமிருந்து வலமாக
S. நிஷாதரன், திருமதி. M. கைலாஷ், S. பிரவின், S. தர்ஷன், S . சஜித்குமார், S. சரண்ராஜ், S. சதுர்ஷிகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கண்ணுக்கு பிரசித்தி பெற்ற EYE CENTRE,
புதிய பொலிவுடன்,
STS HOSPITAL என்ற பெயரில்
இன்னும் சில மாதங்களில்
இடமாற்றம் செய்யப்படவுள்ளதை
மிக்க மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

கண் சம்பந்தமான அனைத்து சிகிச்சைகளையும்
ஆலோசனைகளையும், பரிசோதனைகளையும்
மற்றும் மூக்குக் கண்ணாடி. அதுபோன்ற
பல சேவைகளையும் அனைவரும்
ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.


புதிய முகவரி :
130, 1ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
(மத்திய கல்லூரிக்கு பின் பக்கமாக)

*With Best Compliments from*

**DYNAMIC**
PRINTERS

Offset Printing
Duplo Printing
Digital Printing
Prefect Binding
Mug & Rock Printing
Type setting

No. 218, Peradeniya Road, Kandy
Tel : 081 45 45 197 | Fax : 081 22 22 370
Mobile : 0777 452 476

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்து மன்ற ஆசிரியர் குழாம்
**2017**

1. திரு.A. ராஜாரஞ்ஜிற் (பிரதி அதிபர்)
2. திருமதி.U. சந்திரசேகரன் (பொறுப்பாசிரியை)
3. திரு.V. முரளிதரன்
4. திருமதி. U. ராமநாதன்
1. திருமதி. G பரிமளா
6. திருமதி. M. பாலசந்திரன்
7. திருமதி. D . விஜயபாரதி
8. திருமதி. N தியாகராஜா
9. திருமதி, K. கங்காதரன்
10. திருமதி. J. திருச்செல்வம்
11. திருமதி. L. விஜயகுமாரன்
12. திரு. N. கிஷோகுமார்
13. திரு. .K. ஜெகநாதன்
14. திருமதி.S. சிவநாதன்
15. திருமதி. S. சரோஜினி
16. திருமதி. Y. ராசையா
17. திருமதி, K. சுமதி
18. திருமதி. N. புஷ்பராணி
19. திருமதி. M. சிசில் குமாரி
20. திரு. K ஆனந்தவேல்
21. திருமதி. K சந்திரகலா
22. திருமதி, K. செந்தினி
23. திருமதி.S கஜான்தினி
24. திரு.S. சிவநேசன்
25. திருமதி.K.P.தர்சினி

## இந்து மன்ற மாணவர் குழாம்
**2017**

தலைவர்
V நிலுக்க்ஷன்

செயலாளர்
M. சுஜித்

உப தலைவர்
R. கிருஷ்ணகுமார்

உப செயலாளர்
V. விஜயகிருஷான்த்

பொருளாளர்
K. ஸ்ரீஹரிபிரஷாந்த்

உப பொருளாளர்
K. கமலரூபன்

இதழாசிரியர்
S. கோகுல்நாத்

உப இதழாசிரியர்
S. R. கிருஷான்த்

விசேட செயலணி:
1. S. பிரவீன்
2. K. கிதுர்ஷன்
3. S. நிஷாதரன்
4. M. கைலாஷ்
5. S. சரண்ராஜ்
6. R. மதுஷான்
7. S. சஜித்குமார்
8. S. தர்ஷன்
9. A. ஆகாஷ்
10. S. ராஜகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

* பிரதம அதிதியாக பெருமனத்துடன் எமது அழைப்பையேற்று வருகை தந்து எமது கல்லூரியின் பழைய மாணவரும் ஸ்ரீபாத தேசிய கல்விக் கல்லூரி உப பீடாதிபதிமான திரு R.லோகேஸ்வரன் அவர்களுக்கும்

* சிறப்பு அதிதியாக வருகை தந்து சிறப்பித்த மத்திய மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் பெருமைக்குரிய திரு.P.S.சத்தீஸ் அவர்களுக்கும்

* இந்துமன்றம் சிறப்புடன் நடாத்தும் வாணி விழாவிற்கு நிறைந்த மனத்துடன் அனுமதியும் உதவியும் வழங்கிய அதிபர் அவர்களுக்கும்.

* விழாவிற்காக அயராது உழைத்த ஆசிரியர்கள் மாணவர்களுக்கும்.

* எமக்கு என்றுமே ஒத்துழைப்பும் உதவியும் வழங்கும் பெற்றோர்கள் பழைய மாணவர்களுக்கும்

* விளம்பரங்களை உரிய வேளைகளில் தந்துதவிய விளம்பரதாரர்களுக்கும்

* எமக்கு பண உதவிகளை வழங்கிய பெற்றோர்களுக்கும் பழைய மாணவர்களுக்கும் நலன் விரும்பிகளுக்கும்

* உரிய நேரத்தில் இவ்விதழை வடிவமைப்பு செய்து தந்த திரு. R. மோகன்லால் (DYNAMIC PRINTERS) அவர்களுக்கும்

* சகோதர இன இசைப்பிரிவு ஆசிரியர்களுக்கும்

* சிறப்பாக ஒலி ஒளி வழங்கிய நிறுவனத்திற்கும்

மனமார்ந்த சன்றியினை தெரிவித்துக் கொள்கின்றோம்.

'நன்றி மறப்பது நன்றன்று - நன்றல்லதை
அன்றே மறப்பது நன்று'

இந்து மாணவ மன்றம்
புனித சில்வெஸ்ரர் கல்லூரி, கண்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் 6 முதல்
# A/L வரை
# தமிழ்,
# English Medium
# வகுப்புகள்
# நடைபெறுகின்றது
# @

# BRIGHT ACADEMY

Quality Education for Quality society

199, 217, D.S. Senanayake Veediya, Kandy - 077 - 3424383

No-1 Results producers in the city

With current / Ex - School Teachers, Good proven track records

English Medium සිංහල මාධ්‍ය தமிழ் மொழிமூலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாணி விழா 2017
சிறப்புடன் நடைபெற
நல்வாழ்த்துக்கள்

**With Best Wishes From**
**98 O/L Batch (Tamil medium)**

**M.Harshan**
**M.B.M.Yousuf**
**S.Shaa**
**M.Luthufullah**
**Sadiq Riyal**
**S.Sadhis Kanth**
**P.Thavapalan**
**K.Satsoroopan**
**V.VinothNiranjan**
**S.Pradiviraj**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org